ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழா மலர்

5 jähriges Jubiläumsbuch

Thamilalayam Jüchen தமிழாலயம் யூச்சன்



09.10.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய கீதம்

கல்வியும் கலையும்
நம்மிரு கண்கள்
நல்தமிழ் மொழி
எங்கள் உயிராகும்

பன்மொழிக் கல்வியும்
பல்கலை நுட்பமும்
பயிற்றுவிக்கும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

தன்மானத் தமிழர்
பண்பாடதனை
தரணியிற் பரப்பிடும் தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

பாலகர் நாங்கள்
பாடி ஆடி
படித்து மகிழும் ஆலயம்
எங்கள் தமிழாலயம்

பாவலர் போற்றிட
நாவலர் வாழ்த்திட
என்றென்றும் வாழிய தமிழாலயம்
எங்கள் தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilische Bildungsvereinigung e.V.

செம்மொழி வளர்த்து சிறந்தோங்க வாழ்த்துகின்றோம்

உலகமொழிகளில் முதல் மொழியாகிய தமிழ் மொழி, செம்மொழி என உலகமொழி ஆய்வாளரின் அங்கீகாரம் பெற்றபொழுதும், அதற்கென்று ஓர் அரசு உருவாகுவதை உலகநாடுகள் தம் ஆயுத பலத்தால் அச்சுறுத்தி நசுக்கி ஒதுக்க முயன்று வருவது உலகறிந்த உண்மை.

7 கோடி தமிழர் வாழும் தமிழ் நாட்டில் ஆரிய இனத்தின் அடக்கு முறையும் 30 ஆயிரம் தமிழ் பேசும் ஈழநாட்டில் இனவாத அரசின் அடக்குமுறை, ஒடுக்கு முறைகளால் 1811ம் ஆண்டு வரை முடியோடும், கொடியோடும் தமிழ்மன்னரால் அரசோச்சிய தமிழ், இன்று பேரழிவுகளைச் சந்தித்து, தலைநிமிர முடியாத நிலைக்குள்ளாக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்த விடயமாகும்.

தமிழினம் ஒன்றுபட்டால் நிட்சயம் உண்டு வாழ்வு. அதை அறிந்த அரசு, தமிழ் இனத்தில் சிலரை ஏமாற்றி பட்டம், பதவிகளை வழங்கி, தமிழ், இஸ்லாமிய தமிழ் பேசம் இனத்தைப்பிரித்தும், எதிரிகளாக்கி நாடகமாடி வருவதும் தமிழ்மொழி அரசு அந்தஸ்து பெறமுடியா நிலையை ஏற்படுத்தி வருகின்றது. புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழினம் ஒன்றுபட்டு செயற்பட்டு நாடுகடந்த அரசை உருவாக்கி மேலை நாடுகளின் அங்கீகாரம் பெற்று தமிழையும் தமிழினத்தையும் வாழ வழிசமைக்கமுடியும். எனவே புலம் பெயர் சமூகம் ஒன்று படல் வேண்டும். புலம்பெயர்நாடுகளில் ஒன்றான யேர்மனியில் வாழும் தமிழினம் தாய் மொழியையும் அத்துடன் இணைந்த கலை, கலாச்சார விழுமியங்களையும் கல்விக்கூடங்கள் மூலமாக வளர்த்து வளம் பெருக்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே. ஆந்த வகையில் யேர்மனியில் 20 ஆண்டுகளாக இயங்கிவரும் பள்ளிகள் தாய் மொழி, கலை, கலாச்சார வழுமியகளை வளர்த்து வருகின்றன. இக்கல்விக்கூடங்களில் ஒன்றான யூச்சன் நகரமைந்த தமிழாலயமும் ஒன்றாகும், இவ்வாலயம் தனது ஐந்தாவது அகவை நிறைவு விழாவை 09-10-2010ல் கொண்டாட விளைவது மகிழ்ச்சியானதே.

யேர்மனியில் முதல் ஆரம்பிக்கப்பட்ட தமிழாலயமாகத் திகழ்ந்த இவ்வாலயம் எம்மவர்க்குள் ஏற்பட்டபேதம் காரணமாகப்பிரிந்து பின் செயலிழ்ந்து, ஆயினும் தமிழ் ஆர்வலர்களின் முயற்சியால் 2004ம் ஆண்டு தமிழ்க்கல்விக்கழகத்தால மீண்டும் உருவாக்கம் பெற்றது, இவ்வாலயத்தின் நிர்வாகியாக திரு சிவலிங்கம் அவர்களும் உதவி நிர்வாகியாக திருமதி சியாமளா பிரதாபராசா அவர்களும் கல்விக்கழக மாநிலச் செயலரால் நியமிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வமுள்ள ஆசிரியர்கள் எழுவரும் 50 மாணவமணிகளும் இணைந்த ஆலயமாக இயங்கி அகவை ஐந்தை நிறைவு செய்து விழா எடுப்பது மகிழ்வான செய்தியே இவ்வாலயத்தின் நிர்வாகத்திறனாலும், ஆசிரியர்களின் முயற்சியினாலும் சிறப்பாக இயங்கி வரும் இவ்வாலயத்தில் பாலராண்டுமுதல் மேல்வகுப்புக்கள் வரை நடைபெறுவதுடன் இவ்மாணவர்கள் பொதுத்தேர்வு, தமிழ்த்திறன், விளையாட்டு, உதைபந்தாட்ட நிகழ்ச்சிலும் பங்கு கொண்டு வெற்றிகளீட்டி தமிழாலயத்துக்கு பெருமை சேர்த்து விளங்குவதுடன் நற்பண்புகள், பழக்க வழக்கங்களிலும் உயர்ந்து வருவதைக் காண்கின்றோம். மேற்படி வளர்ச்சிக்காக ஊதியமின்றி பணியாற்றிவரும் ஆசிரியர்கள், கல்விக்கழகக்கூட்டமைப்பைப் பேணிவளர்த்துவரும் நிர்வாகம், மாணவமணிகள். அவர் தம் பெற்றோர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கல்விக்கழகம் சார்பிலே பாராட்டி நற்பணி தொடர வேண்டுகின்றேன்.

திட்டமிட்ட இனவாதத்தால் அனைத்தையும் இழந்து, பேரழிவைக்கண்ட தமிழனத்தின் ஒரே ஒரு அடையாளமாகக் காணப்படும் தமிழ் மொழி புலம் பெயர் நாட்டில்வளர்ச்சி பெற அனைத்துத் தமிழினமும் ஒன்று பட்டு செயற்படல் அவசியம் என்பதை நினைவூட்டி, தமிழாலய விழாச்சிறப்புறகல்விக்கழகத்தின் சார்பிலே வாழ்த்தி மகிழ்கின்றேன்.

செம்மொழியாம் தேன்தமிழை தேசமெல்லாம் பரவச் செய்வோம்.
இரா. நாகலிங்கம்
பொறுப்பாளர்
த.கல்விக்கழகம்
யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 Jahre Tamilische Schule Jüchen



Grußwort

Die Integration der tamilischen Mitbürger und Mitbürgerinnen ist, wesentlich unterstützt durch den Verein „Tamilisch-Deutsche Freundschaft“, in unserer Gemeinde sehr gut gelungen

Ein wichtiger Bestandteil der Integration ist, dass die Kinder unserer tamilischen Mitbürger, die überwiegend in Deutschland geboren und aufgewachsen sind, nicht vergessen, wo ihre Wurzeln liegen.

Die vor fünf Jahren in Hochneukirch gegründete Tamilische Schule bringt ihren Schülern die Heimat ihrer Eltern in Musik, Literatur, Religion und nicht zuletzt in der tamilischen Sprache nahe, die eine der ältesten Kultursprachen weltweit ist.

Die Schule hat sich bereits in der kurzen Zeit ihres Bestehens mit ihren mehr als 50 Schülern und 15 Lehrern zu einem bedeutenden multikulturellen Mittelpunkt unserer Gemeinde entwickelt.

Zum 5-jährigen Bestehen der Tamilischen Schule gilt mein Dank dem Schulleiter Thambaiyah Sivalingam, unserem Kreistagsabgeordnetem Karl-Heinz Ehms als Mann der ersten Stunde und allen tamilischen und deutschen Mitbürgern für ihr jahrelanges ehrenamtliches Engagement.

Sie alle haben unseren tamilischen Freunden schnell ein neues Heimatgefühl vermittelt und ein problemloses kulturelles Miteinander ermöglicht.

Ich wünsche der Tamilischen Schule Jüchen für die Zukunft weiterhin alles Gute und viel Erfolg.

Harald Zillikens
Bürgermeister

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fünfjähriges Bestehen der tamilischen Schule Jüchen

Grußwort

Kulturelle Vielfalt ist längst typisch für unser Land; und wir haben als Gesellschaft die Verantwortung, etwas für das gute Zusammenleben von Menschen unterschiedlicher Herkunft oder Religion zu tun. In Jüchen verstehen die Menschen das aber nicht als Pflicht, sondern als Herzenssache. Seit Ende der 80er Jahre besteht bereits der Verein „Tamilisch-Deutsche Freundschaft" und vor fünf Jahren wurde die Tamilische Schule Hochneukirch gegründet.

Der Freundeskreis fördert mit regelmäßigen Kulturfesten die Integration der tamilischen Mitbürger, und die Schule trägt auch dazu bei, dass deren Kinder, die überwiegend in Deutschland geboren und aufgewachsen sind, nicht vergessen, wo ihre Wurzeln liegen. Literatur, Musik, Tanz, Hinduismus zählen zu den Unterrichtsinhalten, ebenso wie die schwer zu erlernende tamilischen Sprache mit ihren 247 Schriftzeichen. Und die Schule lebt vom ehrenamtlichen Engagement deutscher und tamilischer Bürger – das ist echtes multikulturelles Miteinander.

Der Rhein-Kreis Neuss schreibt in diesem Jahr erstmals einen Integrationspreis aus; und auch mit seinem Migranten-Stipendium setzt er sich aktiv für die Integration seiner ausländischen Bürgerinnen und Bürger ein. Integration und Wahrung der kulturellen Identität, das ist Motto der deutsch-tamilischen Freundschaft in Jüchen. Treibende Kraft dahinter ist der ehemalige stellvertretende Bürgermeister und Kreistagsabgeordnete Karl-Heinz Ehms, dem ich dafür herzlich danke. Zum 5-jährigen Bestehen der Tamilischen Schule Jüchen gilt mein Dank und mein Glückwunsch auch Schulleiter Herr Sivalingam sowie allen Freunden und Förderern dieser beispielhaften Einrichtung.

Hans-Jürgen Petrauschke
Landrat des Rhein-Kreises Neuss

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க் கல்விக் கழகம் - யேர்மனி

தமிழாலயங்களின் கல்வி,கலை,விளையாட்டு ஒருங்கிணைப்பு நடுவம்

Tamilische Bildungsvereinigung e.V.

ஸ்ருற்காட், 09.10.2010

அன்புடையீர் !

வணக்கம்

மொழியும், கலையும், பண்பாடுமே ஒரு தேசிய இனத்தின் உயிர்ப்பைபக்காட்டுகின்றன. தமிழின் தொன்மைக்கு நிகரான அதன் நிகழ்கால எதிர்கால வளர்ச்சி அமையவேண்டும். தமிழன் எங்கு வாழ நேரினும் அங்கெல்லாம் அவன் தனது இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய பொறுப்புக்கு உட்படுகின்றான். யூச்சன் வாழ் தமிழ் மக்கள் இப்பணியைத் திறம்படச் செய்ததன் அறுவடையை அவர்களின் 5 வது அகவை நிறைவினூடாகக் காணும்போது பெருமிதம் அடைகின்றோம்.

கிளைகளென நினைத்து முறித்து எறியப்பட்டவர்கள் வேர்களாய் இறங்கி விளைந்து செழித்ததன் தகுதிச் சான்றே யேர்மனியின் தமிழாலயங்கள். மொழியாலும், பண்பாடுகளாலும் இரட்டிப்புச் சுமைகளுக்கு மத்தியில் வாழ்கின்றார்கள் எம் சிறார்கள். கிடைக்கும் ஒய்வு நேரங்களைத் தமது தாய்மொழிக் கல்விக்காகச் செலவிடுகின்றார்கள். இந்த முயற்சிகளினால் யேர்மன் பள்ளிகளிலும் இச்சமூகத்திலும் ஏனைய மாணவர்களைவிட அவர்கள் தம்மை முதன்மைப்படுத்தி நிற்பதையும் காண்கின்றோம். தமிழ்ப் பண்பாடுகளைத் தமது பிள்ளைகளுக்குக் கைமாற்றுச் செய்வதில் பெற்றோர்களும் பல சிரமங்களையும் செலவீனங்களையும் சந்திக்கின்ற போதிலும் அவை அனைத்தையும் ஒரு சவாலாக ஏற்று எம்மோடு இணைந்து நின்று செயற்படுகின்றார்கள். பண்பட்ட நிலத்துப் பயிர் செழித்தோங்கும் என்பது பொய்யாமொழி. இந்த அடிப்படையில் யூச்சன் நகரம் தலைசிறந்த களமாக அமைகின்றது.

ஒரு தமிழாலயம் தனது இலக்கை அடைவதற்கு நிர்வாகிகள், ஆசிரியர்களின் சேவை மிக அவசியமாகின்றது. அந்தவகையில் யூச்சன் தமிழாலய ஆசிரியர்கள் கடந்த 5 ஆண்டுகளும் சேவை அடிப்படையில் தமிழ்த்தேசத்துக்குப் பல புத்திஜீவிகளையும், பண்பாளர்களையும் உருவாக்கித்தந்துள்ளனர். ஆசிரியர்களின் சிறந்த செயற்பாட்டுக்குச் சிகரம் வைத்தாற்போல யூச்சன் தமிழாலயம் கடந்த 5 ஆண்டுகளுக்குள் கல்வித்தரத்திலும், விளையாட்டுத்திறனிலும் நாடுதழுவிய ரீதியில் சிறந்த நிலைக்கு வளர்ந்துள்ளது. 2004 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாகியாச் செயலாற்றும் திரு. தம்பையா சிவலிங்கம் அவர்களின் சிறப்பான செயற்பாடுகளும், பெற்றோர், ஆசிரியர்களின் நிறைவான ஒத்துழைப்புக்களையும் இந்த இனிய நாளில் மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.

கடந்த 20 ஆண்டுகளில் யேர்மனியில் தமிழர் வாழும் பகுதிகளில் அங்காங்கே தமிழாலயங்களை அமைத்து 6500 க்கு மேற்பட்ட தமிழ்ச்சிறார்களுக்கு தமிழ்பயிற்றுவித்துவரும் எமக்கு யூச்சன் நகரில் வாழும் தமிழர்களின் அடுத்த சந்ததியினர் தமிழை மறந்து விடுவார்களோ என்ற அச்சம் 5 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது உண்மையே. இப்பொழுது அந்த அச்சம் தவிர்ந்து மகிழ்கின்றோம். அதற்கு உங்கள் அனைவரின் உயர்ந்த பணியே பொறுப்பு. நாம் என்ன சேவை செய்கின்றோம் என்று புரிந்துகொண்டு ஒழுங்காகச் செய்தாலே போதும். எல்லாம் நன்றாக அமையுமென்று கூறி யூச்சன் தமிழாலயம் மேலும் சிறப்புடன் வளர வாழ்த்துகின்றோம்.

கல்வியும் கலையும் நம்மிருகண்கள் நல்தமிழ்மொழி எங்கள் உயிராகும்

நன்றி

செ.லோகன்.
பொறுப்பாளர்
நடுவச் செயலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Fünfjähriges Bestehen der Tamilischen Schule Jüchen

Grußwort

Liebe Tamilische Mitbürgerinnen und Mitbürger,
vor vielen Jahren sind Sie aus einem Land zu uns gekommen, wo ein über Jahrzehnte dauernder Bürgerkrieg tobte.
Sie sind zu uns gekommen, um mit Ihren Familien und Kindern in Frieden und Sicherheit leben zu können. Viele von Ihnen sind mittlerweile in Jüchen heimisch geworden. Für Ihre Kinder ist es zum Zuhause geworden. Sie sprechen unsere Sprache, und das so gut, dass kein Unterschied zu unseren Kindern zu erkennen ist. Sie haben sich integriert.

Aber was ist Integration?

Integration.....

Heißt, sich hier zuhause fühlen
Bedeutet, dazugehören und sich in der Gesellschaft einzubringen
Ist, wenn es keine Rolle mehr spielt, woher und warum man gekommen ist, sondern zählt, wer man ist und was man kann
Braucht Chancengleichheit
Meint, in Dialog zu treten über gemeinsame Werte
Findet vor Ort statt, im alltäglichen Leben und betrifft alle Lebensbereiche.

Doch man sollte auch seine Herkunft nicht verleugnen und Traditionen und Gebräuche aus der „alten" Heimat pflegen.
Das bietet die Tamilische Schule ihren Landsleuten an.
Hier lernen die nachwachsenden Generationen die Muttersprache ihrer Eltern in Wort und Schrift. Sie lernen etwas über die Geschichte Sri Lankas. Sie werden in landestypischem Tanz, Gesang und Instrumentalmusik unterrichtet.
Zum 5-jährigen Bestehen der Tamilischen Schule meinen herzlichen Glückwunsch.
Für die Zukunft wünsche ich weiterhin viel Erfolg und Freude bei der Arbeit.
Meine Unterstützung möchte ich Ihnen auch weiterhin zusichern.

Mit freundlichen Grüßen

Karl-Heinz Ehms

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Grußwort

Zum Schulfest der Tamilischen Schule in Jüchen - Hochneukirch

Liebe Schülerinnen und Schüler, liebe Lehrerinnen und Lehrer,

liebe Eltern, Freunde und Gäste,

wir feiern das Schulfest heute aus einem ganz besonderen Anlass. Die Tamilische Schule wird nun seit fünf Jahren in eigener Trägerschaft geführt. Dazu gratuliere ich ganz herzlich allen, die lernen, lehren und mithelfen. Seit 1989 ist die tamilische Schule in der Gemeinde Jüchen eine feste Einrichtung. Sie war damals die erste Schule, die in Deutschland gegründet wurde. Sie erhielt eine Anschubfinanzierung vom Bistum Aachen. Nach wie vor findet der Unterricht in den Räumen der kath. Kirche statt, im Thomas Morus-Haus. Insbesondere für die tamilischen Eltern ist die Schule – neben tamilischen Festen – ein Stückchen Heimat und für Jung und Alt ist dieser Treffpunkt wichtig, um Kontakte zu pflegen und um sich auszutauschen. Für die Gründer war die tamilische schule sehr wichtig. Sie hofften damals noch, nach einigen Jahren wieder nach Sri Lanka zurückkehren zu können. Mit der Schule, so erwarteten sie, würden ihre Kinder sich leichter im Heimatland ihrer Eltern zurechtfinden. Es wurden neben tamilischer Sprache auch Tanz, Musik, Gesang und Religion angeboten. Um aber auch hier das Leben zu verstehen, gab es Unterricht in deutscher Sprache. Nach Bedarf wurden auch Spielgruppen eingerichtet. Die Hoffnung auf Rückkehr in die Heimat hat sich nicht erfüllt, und so haben sich auch Aufgaben und Ziele gewandelt. Natürlich wird die Muttersprache weiterhin unterrichtet. Sie dient nun mehr dem besseren Verständnis zwischen Eltern und Kindern, Verwandte und Tamilen weltweit können Kontakte behalten. Viele ehemalige Schüler unterrichten inzwischen die Kinder der tamilischen Schule und leiten Spielgruppen. Für deutsche Gruppen und Vereine ist die Schule – neben dem tamilisch – deutschen – Freundeskreis – ein wichtiger Ansprechpartner. Denn das Zusammenleben von Deutschen und Tamilen ist gewachsen. Das Interesse der deutschen an tamilischer Kultur nenne ich hervorragend. So ist die Tamilische Schule nicht nur Kulturträger für die tamilische, sondern auch für die deutsche Bevölkerung.

Ich wünsche der Tamilischen Schule eine gute Weiterentwicklung!

Tamilen und Deutschen wünsche ich ein gutes Miteinander, neue Freundschaften und den Mut, gemeinsam die Zukunft zu gestalten.

Hildegard Kux

Flüchtlingsberaterin

Leiterin des Tamilisch-Deutschen-Freundeskreises und des Interreligiösen Gesprächskreises

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூச்சன் தமிழாலயம்!

அன்னைத்தமிழைக் கற்பதற்காய் அவள்
கன்னல் சுவைதனில் கரைவதற்காய்
முன்னைச் செய்த தவத்தின் பயன்
பின்னைக் கிடைத்த எம் தமிழ் ஆலயம்!

கேள்விகள் ஆயிரம் எழுந்திடினும்
கேலிகள் சிலவும் உதிர்ந்திடினும்
நஞ்சினை உண்டு தேவரைக் காத்த
நீலகண்டனைப் போல் நல் நிர்வாகி!

தீந்தமிழின் சீர்தனை உணர்ந்து
வான்புகழ் வள்ளுவன் வாய்மொழி உரைத்து
இத்தரை மீதிலும் முத்தமிழ் வளர்த்திடும் முனைப்புடன்
கற்பித்தல் பணியிலே களிப்புறும் ஆசிரியர் குழாம்!

ஞாயிறு தோறும் நற்றமிழ் கற்றிட
ஞாலத்தில் நம் தமிழ் மேன்மையைச் சாற்றிட
தாய்மொழிச் சிறப்பினைத் தரணிக்கு உணர்த்திட
தமிழ் ஆலயம் நாடிடும் நம் மழலைகள் மாணவர்!

புலத்திலே முதல் வித்தாய் எழுந்ததெம் யூச்சன் தமிழாலயம்!
புதுமைப்பூக்கள் பலவற்றை விரித்ததெம் யூச்சன் தமிழாலயம்!
கிளைகளை விரித்துத் தமிழ் நறுமணம் பரப்பி
யூச்சன் ஊரிலும் உலகிலும் உயர்ந்த எம் தமிழாலயம்!
வாழிய வாழிய பல்லாண்டு!வையகம் போற்றிட வாழியவே!

நன்றியுடன்
தமிழாலயப் பெற்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்து வந்த பாதையில்...

உலகின் மூத்த குடி நம் தமிழ்க் குடி என பல வரலாற்று ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்டாலும், கலைகள் பல படைத்து காவியங்கள் பல கண்டாலும், இன்று தமிழ் மொழி செம்மொழி என போற்றப்பட்டாலும், காலம் தந்த வலி சுமந்து, தன்னுயிர் காக்க கடல் கடந்து புலம் பெயர் தேசங்களில் புகலிடம் கொண்டு நம் தமிழினம் வாழ்ந்து வரும் வேளையில், நம் எதிர்காலச்சிறார்களின் தாய்மொழிக்கல்வியின் அவசியம் கருதி, சிந்தித்து செயற்பட்ட நகர்வில் தோன்றிய தொலைநோக்குப் பார்வையின் வெளிப்பாடே தமிழாலயங்களின் தோன்றலாகும். இதன் உள்ளார்ந்த நலன்கள் எம் இனம் சார்ந்த பண்புகள், கலை, கலாச்சாரங்களுடன் தாய்மொழிக்கல்வியும் புலம்பெயர் தேசத்தில் நம் சிறார்கள் தொலைத்துவிடாதிருப்பதே ஆகும்.

புலம்பெயர் தேசத்தில் ஜேர்மன் நாட்டில் தமிழ்மொழி உணர்வாளர்களாலும், தமிழ் அறிவாளர்களாலும் முன்னெடுக்கப்பட்டு, யூச்சன் நகரில் உள்ள கரிதாஸ் நிறுவன பணியாளர் திருமதி கில்டகாட் குக்ஸ் அவர்களின் பேருதவியோடு, முதல் தமிழாலயமாக யூச்சன் தமிழாலயம் 1989ம் ஆண்டு உதயம் பெற்றது. இவ் உதயத்திற்கு பலரின் அர்ப்பணிப்புடன்கூடிய செயற்பாடுகள் கைகொடுத்தது எனலாம். இது தமிழ்மொழி ஆர்வலர்களின் தொலைநோக்குப்பார்வையின் ஒரு அம்சமே. இதில் திருமதி கலாநாயகி சூரியகுமாரின் பங்கு எம்மக்களின் மனங்களை விட்டு நீங்காத நினை-வலைகளாக என்றும் நிறைந்திருப்பதை காணக்கூடியதாய் உள்ளது.

தமிழாலய நிர்வாகச் செயற்பாடுகளின் மாற்றம் காரணமாக, 1994ம் ஆண்டு எமது புதிய நிர்வாகத்தின் கீழ், உதவி நிர்வாகியாக திருமதி சியாமளா பிரதாபராசா அவர்களையும் இணைத்துக் கொண்டு மேலும் பல புதிய ஆசிரியர்களையும் ஒன்றிணைத்து, ஏறக்குறைய 90 மாணவர்களுடன், தமிழாலய நிர்வாகச் செயற்பாடுகளை செயற்படுத்தி வந்த வேளையில், 1995ம் ஆண்டு யூச்சன் தமிழாலய ஆண்டுவிழா ஒன்றினை எமது நேரடிக் கண்காணிப்பில் நடாத்தியது மட்டுமின்றி, தமிழாலயத்தில் கல்வி கற்ற சகல மாணவர்களையும் ஏதோ ஒரு நிகழ்ச்சி மூலம் மேடை ஏறவைத்து, மாணவர்களையும் பெற்றோரையும் உற்சாகப்படுத்தி தாய்மொழிக் கல்வியில் அதிகளவு ஆர்வத்தினை ஏற்படுத்தியமை என்றும் என்னால் மறக்கமுடியாததொன்றாகும். நாம் காலநகர்வுகளின் ஏற்ற இறக்கங்களைக் காண்பதைப்போல் எம் தமிழாலயமும் தவிர்க்கமுடியாத காரணங்களால், 2001ம் ஆண்டு அதன் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டு, மீண்டும் 2004ம் ஆண்டு ஜேர்மன் தமிழ்க்கல்விக்கழகத்துடன் இணைந்து தமிழ் சிறார்களின் தாய்மொழிக்கல்வி கற்பித்தலை தொடங்கியது. இன்று வரை யூச்சன் தமிழாலய நிர்வாகம் தன் செயற்பாடுகளில் பல புதியவர்களையும் இணைத்துக்கொண்டு தனது இலட்சிய நோக்கில் சிறப்பாக நகர்ந்து கொண்டே இருக்கின்றது. இதில் துறை சார்ந்த செயற்பாட்டாளர்கள் பலர் இணைந்து தங்கள் காலத்தில தங்களது செயற்பாடுகளை மிகத் திறமையாக வெளிபடுத்தி உள்ளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் குறிப்பாக விளையாட்டு துறையில் 2005ம் ஆண்டு தொடக்கம் இன்று வரையில் யூச்சன் தமிழாலய மாணவர்களால் பல சாதனைகள் படைக்கப்பட்டது. பல தடவைகள் உதைப்பந்தாட்டப் போட்டியில் பெண்கள் பிரிவும் பங்கு கொண்டு, எதிர் அணிகளை திணறடித்தனர் எனலாம். எமது தமிழாலயம் இன்று ஏறக்குறைய 50 மாணவர்களைக் கொண்டிருந்தாலும் விளையாட்டுத் துறையிலும், அணிநடையிலும் மிகத்திறமையாக களமாடியதெல்லாம் எமக்கு பெருமையே. அதுமட்டுமன்றி தமிழ்த்திறன் போட்டியிலும் எமது மாணவர்கள் தமது முத்திரையைப்பதித்துள்ளார்கள். அத்துடன் எமது தமிழாலயத்தில ஆண்டு 11 படித்து வெளியேறிய மாணவர்களையும், இன்றைய நிர்வாகம் உள்வாங்கி செயற்பட்டு வருகின்றது.

இன்று இரட்டைக் கலாச்சாரத்தின் மத்தியில் வாழும் எம் சிறார்களிற்கு, புலம் பெயர் தேசத்தில் இன்றைய தமிழாலயங்களின் அபார வளர்ச்சி, அன்றைய எமது தொலைநோக்குப் பார்வைக்கு இன்று கிடைத்த வெற்றியாகும். தமிழாலய வளர்ச்சிக்கு நல்லுள்ளம் கொண்ட பெற்றோர்களது புரிந்துணர்வும், ஒத்துழைப்பும், தமிழ்க் கல்விகழகத்தின் சிறந்த ஆலோசனைகளும், சேவை உள்ளம் கொண்ட ஆசிரியர்களது உழைப்பும், கட்டுக்கோப்பான நிர்வாக செயற்பாட்டுக்கட்டமைப்பும் இன்று நாம் தலை நிமிர்ந்து நிற்க உதவுகின்றது. இன்றும் என்றும் நம் சிறார்கள் தாய்மொழிக்கல்வியில் சாதனைகள் படைத்து நிற்க நாம் எல்லோரும் ஒன்று பட்டு உறுதி கொள்வோமாக.

நன்றியுடன்
திரு. தம்பையா சிவலிங்கம்
நிர்வாகி
யூச்சன் தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Der Weg, den wir gingen

Auch wenn von Historikern unser tamilisches Volk als das älteste Volk bezeichnet wird, unsere Sprache als die Reinste gilt, das Leid der Zeit die Flucht uns vergessen ließ und in fernen Ländern wir schwer uns den Lob verdient haben, müssen wir an die Zukunft der nächsten Generation denken und ihnen die Möglichkeit bieten, ihre Muttersprache zu erlernen. Das Gute an dieser Tatsache ist, dass unsere volkseigenen Traditionen, Künste und die Kultur auch weit außerhalb unserer Heimat nicht aussterben, sodass dies unseren Kindern zu Gute kommt.

In Deutschland kam im Jahre 1989 durch Menschen, die sich für die Verbreitung und Erhaltung der tamilischen Sprache eingesetzt haben, wie z.B. in Hochneukirch mit Hilfe von Frau Hildegard Kux, einer Caritas-Mitarbeiterin, die erste „Tamilische Schule" in Jüchen zustande. Dass wir so weit kommen konnten, verdanken wir den Menschen, die sich der Sprache hingaben/oder geopfert haben. Für Menschen, die sich für diese Sprache begeistern, beweist diese Handlung die besondere Stärke unserer tamilischen Sprache. In Anbetracht dessen werden wir die aufrichtige Unterstützung von Frau Kalanayaki Suriyakumaran nicht vergessen können.
Die im Jahr 1994, durch den Wechsel des Schulleiters, neu eröffnete Schule mit ca. 90 Schülern wurde im Jahr 2001 geschlossen und 2004 mit Hilfe der tamilischen Bildungsvereinigung wiedereröffnet. In dieser Zeit übernahm Herr T. Sivalingam als Schuldirektor und Frau S. Pirathaparajah als stellvertretende Rektorin die Leitung der Schule. 1995 feierte die Tamilische Schule Jüchen mit Leitung der vorstehend genannten Rektoren und mehreren ehrenamtlichen Lehrern ihre erste Jubiläumsfeier, an dem die Schüler mit Tanz, Gesang, Theaterstücken und vielen anderen Aufführungen erfolgreich teilnahmen. Auch heute steigt die Anzahl der Schüler und Schülerinnen stetig und fördert den Erfolg dieser Schule. Die Schule entwickelte sich, in dem sie auch fachspezifische Lehrkräfte einstellte, welches sich als sehr positiv erwies.

In den Jahren 2005 bis 2008 galt die besondere Aufmerksamkeit dem Sport. Die Schüler und Schülerinnen machten ihre Schule stolz, in dem sie ihre Talente in Leichtathletik und Fußball unter Beweis stellten.
Ferner ist zu erwähnen, dass unsere Schüler sich auch beim Bildungswettbewerb unserer Schule einen großen Namen erschafft haben. Besonders stolz sind wir auf die Schüler, die uns auch nach ihrem Schulabschluss tatkräftig als ehrenamtliche Lehrer unterstützen. Auch wenn unsere Kinder in einer zwiespältigen Gesellschaft aufwachsen, ist es uns durch die Gründung tamilischer Schulen gelungen, die Förderung und Erhaltung unserer Muttersprache zu bewahren, sodass auch die zukünftige Generation seine Wurzeln nicht vergessen kann und diese weiter fortführen wird.
Nur die gemeinsame Unterstützung der Eltern, Lehrer und Schulleiter sichert den Zusammenhalt der Tamilischen Schule und gibt den Kindern jetzt und der folgenden Generationen den erforderlichen Ansporn, ihre Muttersprache zu erlernen und sich selbst in der Gesellschaft weiter entwickeln zu können.

T.Sivalingam
(Schulleiter)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Grußwort zum Jubiläum der Tamilischen Schule in Jüchen

Mit großer Freude gratuliere ich der tamilischen Schule in Jüchen zu ihrem fünfjährigen Jubiläum.
Als Ethnologe interessiere ich mich seit vielen Jahren für die tamilische Kultur und Sprache in Indien und Sri Lanka. Daher war ich freudig überrascht, als ich die Tamilen in Deutschland für mich „entdecken" konnte. Die tamilische Kultur in Deutschland und in anderen europäischen Ländern zog mich sofort in ihren Bann und diese Faszination hat mich bis heute nicht losgelassen.

In der tamilischen Schule in Jüchen – und in vielen anderen Städten in Deutschland lehren tamilische Migranten ihren Kindern die Kultur und die Sprache, mit der sie selbst aufgewachsen sind. Dadurch fördert die tamilische Schule das Verständnis zwischen den Generationen und die Kommunikation zwischen tamilischen Migranten in Deutschland und ihren Verwandten und Bekannten in Sri Lanka, Kanada, Großbritannien und in anderen Ländern weltweit. Die reichhaltige und lebendige Kultur der Tamilen „in der Diaspora" wäre ohne Institutionen wie die tamilische Schule kaum vorstellbar.

Die tamilische Traditionspflege und die Gemeinschaftserfahrungen an der tamilischen Schule tragen dazu bei, dass tamilische Kinder und Jugendliche kulturelle und soziale Fähigkeiten erlangen, die sie positiv in diese Gesellschaft einbringen. Zu gleichen Teilen kompetent in der Kultur ihrer Eltern und in der deutschen Gesamtgesellschaft können tamilische Jugendliche in Deutschland ihre Zukunft selbstbewusst gestalten. Die tamilische Schule ist ein wichtiges Zeichen für die lebhafte tamilische Kultur in Jüchen und sie fördert die Begegnung zwischen den Menschen und ihren Kulturen. Der tamilischen Schule in Jüchen gebührt für ihre Verdienste die größte Anerkennung ich wünsche ihr aus tiefstem Herzen für die Zukunft viel Erfolg.

Christian Kothe Ethnologe, M.A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றியுடன் திரும்பிப்பார்க்கிறோம்

கல்வித்தானமே சிறந்த தானம் என்பதை உணர்ந்தவர்கள் தமிழர்கள். அதற்கேற்ப புலம்பெயர் நாடுகளில், தாய்மொழிக்கல்வியின் அவசியத்தை உணர்ந்து, தமிழாலயங்களை அமைத்து, வளர்ந்துவரும் சிறார்களுக்கு தாய்மொழிக் கல்வியினை ஊட்டிவரும் தமிழ்கல்விக்கழகத்தின் பணியினை பாராட்டாமல் இருக்க முடியாது. ஒவ்வொரு கிராமங்களிலும் தமிழாலயங்களை அமைத்து, அங்கு வாழும் சிறார்களுக்கும் தாய்மொழிக் கல்வியினை இலகுவாகப் பெற்றுக்கொள்ள வழி அமைத்து வருகின்றது. அத்துடன் ஒரு நிர்வாகியைத் தேர்ந்தெடுத்து, அப்பாடசாலையைக் கட்டிக்காக்கும் பொறுப்பினை அவரிடம் கையளிக்கின்றது. எமது கிராமமாகிய யூச்சனில், 2004ம் ஆண்டு தமிழாலயம் ஒன்று சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பாடசாலையைக் நிர்வகிக்க, தகுதியும், தாழாத முயற்சியும், பொதுநல சிந்தனையும் கொண்ட திரு. சிவலிங்கம் அவர்கள் தமிழ்க் கல்விக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டார். சாதாரண குடும்பத்தினைக் கட்டிக்காக்காப்பதிலேயே எத்தனை சிக்கல்கள்! எத்தனை சங்கடங்கள்! 50 மாணவர்களையும் அவர்தம் பெற்றோரையும் இணைத்து செயற்படுத்தும் பணி எவ்வளவு சிரமமானது என்பதை நாம் யாவரும் உணர்ந்துகொள்ள முடியும். அந்த வகையில், எத்தனை பிரச்சினைகள், சங்கடங்கள் ஏற்பட்டபோதும், அத்தனையையும் சாதுரியமாகவும், பொறுப்புணர்வுடனும் எதிர்கொண்டு இக்கல்விக்கூடத்தை பொதுப்பணி நோக்கோடு நிர்வகித்துவரும் திரு. சிவலிங்கம் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவரின் சிறப்பான பணிக்கு, நிழலாக இருந்து, நிறைவான ஒத்துழைப்பை வழங்கிவரும் அவர்தம் குடும்பத்தினையும் இந்நேரத்தில் பாராட்டுகின்றோம். நிர்வாகப் பணியினை இலகுபடுத்தும் நோக்குடன், உதவிநிர்வாகி, நிதிப்பொருப்பாளர், பெற்றோர் பிரதிநிதி, தமிழ்த்திறன்போட்டிக் குழுவினர், விளையாட்டுத்துறைக் குழுவினர், தேர்வுக்குழுவினர், கலைத்துறைக்குழுவினர் எனப் பல பிரிவுகளை ஏற்படுத்தி, மாணவர்களுக்கு நிறைவான பயன் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. காலத்துக்குக்காலம், அந்தந்தத்துறையில் கடமைபுரிபவர்கள் மாறிக்கொண்டே இருந்தாலும், பணிபுரிகின்ற அனைவரும் பாராட்டுதலுக்கும், பெருமைக்குரியவர்களே. நிர்வாகக் குழுவில் பணிபுரிந்த, புரிகின்ற அனைத்துப் பணியாளர்களுக்கும், தாய்மொழிக்கல்வியினை தாய்மையுணர்வோடு நிறைவாக வழங்கிவரும் பெருமைமிக்க ஆசிரியர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக இப்பாடசாலையின் வளர்ச்சியில் ஊன்றுகோலாக இருந்துவரும் பெற்றோர்களுக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்ற அனைத்து தமிழ், யேர்மன் மக்களுக்கும், வேண்டும்போதெல்லாம் ஆரோக்கியமான ஆலோசனைகளை வழங்கிவரும் கல்விப்பணியக உறுப்பினர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி இனிதான நன்றிகளை இத்தருணத்தில் தெரிவித்துக்- கொள்கின்றோம்.

திருமதி சியாமளா பிரதாபராஜா
உதவி நிர்வாகி – யூச்சன் தமிழாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wir blicken zurück ...

„Lehren ist eine große Tat", dies berichten tamilische Vorfahren. Dies nahm die Tamilische Bildungsvereinigung zu Herzen und gründete in vielen Städten Deutschlands und weltweit Tamilische Schulen, mit dem Ziel den hier lebenden bzw. geborenen Kindern die Muttersprache zu lehren. Die Aufwendung, die hierfür von der Tamilischen Bildungsvereinigung gemacht wurde, muss gelobt werden. An jeder Schule wird ein Schulleiter gewählt, der die volle Verantwortung für diese trägt.

So wurde auch mit Hilfe der Tamilischen Bildungsvereinigung in unserem Dorf „Jüchen-Hochneukirch" im Jahre 2004 wieder gegründet. Aufgrund des Engagement und des Ehrgeizes wurde Herr Sivalingam für den Schulleiterposten auserwählt. Ein Familienleben zu führen ist problematisch, doch 50 Schüler/innen und deren Eltern zu handhaben und nebenbei eine Schule zu leiten ist jedoch eine viel schwerwiegendere Aufgabe. Dies ist uns allen bewusst. Egal wie viele Probleme entstanden, er blieb stets objektiv, optimistisch und fand immer einen Ausweg. Dies ist bemerkenswert. Für seine erfolgreiche Arbeit fand er bei seiner Familie stets Rückhalt und Unterstützung. Zur Vereinfachung der Schuladministration wurden die Aufgaben unterteilt in stellvertretende Schulleiterin, Elternsprecher, Buchhalter, Sprachwettbewerbs-, Sport-, Kulturbereich- und Prüfungsorganisatoren. Auch wenn diese Organisatoren Jahr für Jahr neu gewählt werden, bleiben ihre lobenswerten Tätigkeiten unvergessen.

Im Namen der Tamilischen Schule Jüchen bedanken wir uns recht herzlich bei allen Lehrern, Schülern, Eltern, dem Tamilisch-Deutschem Freundeskreis und Bekannten für die stets tatkräftige Unterstützung, Vertrauen und Hilfe, die sie uns Jahrelang entgegengebracht haben.

Frau Shiyamala Pirathaparajah
Stellvetretende Schulleiterin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

போற்றுகிறோம் உங்களை ...

தாய் மொழிக் கல்வி தந்திடும் - நல்
தமிழ் கூறும் ஆசான்கள் - நாம்
தவம் செய்து பெற்றிட்ட
தாய்மொழிச் செல்வர்கள்.

பெருமைக்கும் போற்றுதலுக்கும் - நாம்
புகழாரம் சூட்டுதற்கும்
பெரும் தகுதி பெற்றிட்ட
பொங்கு தமிழ்த் தனவான்கள்.

மாணவச் செல்வங்கள் - மனதில்
மாண்புற நிறைந்தவர்கள் - மதி
மங்கா ஒளி கொண்ட
மாணிக்க மனிதர்கள்.

சேவை பெரிதென்றெண்ணி
சேயோடு சேர்ந்தவர்கள் - அங்கு
சுந்தரத் தமிழ்க் கல்வி
சுதந்திரமாய்த் தந்தவர்கள்.

கற்க கசடற கற்கை வேண்டி – தமிழ்
கல்விக் களப் போரில்
களம் புகுந்த கனவான்கள் - உங்கள்
கல்விப் பணி தொடர – நாம்
கரம் சேர்த்து சிரம்தாழ்த்தி வணங்குகிறோம்.

நன்றியுடன்
கபிலன் சிவலிங்கம்இ
கதீச்சன் சிவலிங்கம்
ஆண்டு 12 மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் அகத்தியமும் தமிழாலயத்தின் சிறப்பும்

„ஓடிடும் தமிழா நில் நீ! ஒருகணம் மனதைத் தட்டு, வீடு நின்னுருள் சொந்தம் விளைநிலம் காடு விட்டாய், தேடிய தெல்லாம் விட்டு திசைபல செல்லும் வேளை பாடிய தமிழை மட்டும் பாதியில் விட்டிடாதே" என்று பாவலர் அம்பி அவர்கள் ஓடிடும் தமிழா என்கிற பாவிலே கூறும் விதியை மனதிற்கொண்ட நம் நிர்வாகி திரு. சிவலிங்கம் அவர்களும் நம் தமிழ் ஆசிரியர்களும் இன்று 5 ஆண்டுகளாக யூச்சன் தமிழாலயத்தை நடாத்திக்கொண்டு வருகிறார்கள். தாய்மொழியின் மீது அதிகளவில் ஆர்வம் கொண்ட இவர்கள் புலம்பெயர் தமிழ் சிறுவர்கள் தாய்மொழியின் அகத்தியத்தைப் புரிந்து கொண்டு தாய்மொழி அழிந்து விடாது பேண வேண்டுமென்ற நிலையில் உறுதியாக இருக்கின்றார்கள்.

ஆனால், புலம்பெயர் நாடுகளில் வாழும் நம் தமிழ் மக்களில் சிலர் ஜேர்மனியில் வாழும் பிள்ளைகளுக்கு தமிழ் அவசியமில்லை. அவர்கள் ஜேர்மன் மொழியை மட்டும் பயின்றால் போதும் என்ற எண்ணத்துடன் தங்கள் பிள்ளைகளை தமிழாலயத்திற்கு அனுப்ப மறுக்கிறார்கள். „ஜேர்மன் பள்ளியில் படிக்கவே எனக்கு கடினமாக இருக்கிறது. அத்தோடு நான் தமிழாலயத்திற்கும் சென்றால் எப்படி படிப்பேன?" என்று சில பிள்ளைகள் வினாவுவார்கள். ஜேர்மன் பள்ளிக்கும் ஜேர்மன் மொழிக்கும் முக்கியத்துவத்தை கொடுக்கும் இவர்கள் ஏன் தமிழாலயத்திற்குச் சென்று நம் தாய்மொழியாகிய தமிழைக் கற்க மறுக்கிறார்கள்? இங்கு வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் பள்ளிக்கும் ஜேர்மன் பள்ளிக்கும் சென்று படிப்பதற்கு சில நேரங்களில் இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும். எனினும், தமிழ் பள்ளிக்குச் சென்றால் பல நன்மைகள் ஏற்படும்.

இலங்கைப் போரால் உலகெங்கும் சிதறியிருக்கும் நம் உறவுகளை சந்திக்கும் போது நாம் வாழிடமொழியில் அவர்களுடன் பேச முடியாது. தமிழில் மட்டும் தான் பேச முடியும். மேலும், தமிழ் கற்பதின் மூலம் தாய்நாட்டின் வரலாற்றினையும் தாய் மண்ணின் பெருமையினையும் இங்கு வாழும் தமிழ்ப் பிள்ளைகள் உணர்ந்துகொள்ள முடியும்.

தமிழாலயம் சிறுவர்களுக்கு தமிழை மட்டும் கற்றுக்கொடுப்பதில்லை. மாணவர்கள் தங்கள் திறமைகளை வெளிக்கொணர்ந்து அத்திறமைகளை மேலும் வளர்த்தெடுப்பதற்கும் தமிழாலயம் வழிசமைக்கின்றது. இக்கரணியத்தால் தமிழ்க் கல்விக் கழகம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்த்திறன் போட்டியையும் விளையாட்டுப் போட்டியையும் நடாத்திக்கொண்டு வருகிறது. அப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள், வெற்றிக்கிண்ணங்கள் முதலியன வழங்கப்படும். தங்கள் மாணவர்களை ஊக்குவிப்பதற்கு யூச்சன் தமிழாலயம் இடையிடையே சின்னச்சின்ன போட்டிகளை வைத்து அதில் வெற்றி பெறுபவர்களுக்குப் பரிசுகளை வழங்குகிறது. மேலும், பிள்ளைகளுக்கு தமிழர் பண்பாடு, கலை, கலாச்சாரம் முதலியனவும் கற்றுக் கொடுப்பதில் ஆர்வம் கொண்ட நம் யூச்சன் தமிழாலய ஆசிரியர்கள் பொங்கல் விழா, சவரஸ்வதி பூசை போன்ற சைவ நெறியைச் சார்ந்த விழாக்களை கொண்டாடுவதற்கு ஒழுங்கு செய்வார்கள். அவ்விழாக்கள் மாணவர்களாலும் பெற்றோர்களாலும் மிக நன்றாக நடாத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் எம் மாணவர்கள்தான் அகவணக்கம் செய்து பின் தமிழாலயகீதம் மற்றும் தேவாரங்கள் படித்து தமிழாலயத்தை தொடங்கிவைக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது யூச்சன் தமிழாலயத்தின் **5வது** ஆண்டுவிழாவுக்கான பொறுப்பை நிர்வாகி திரு. சிவலிங்கம் அவர்கள் மாணவர்களிடமே கொடுத்துள்ளார். இதனூடாக அம்மாணவர்கள் நிர்வாகத்தினுள் ஒன்று சேர்க்கப்படுகிறார்கள். இதுவே, யூச்சன் தமிழாலயத்தின் சிறப்பாகும். பிள்ளைகள் தங்கள் சிந்தனைகளை மற்ற மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் பெற்றோர்களுடனும் கலந்தாராய்ந்து வரும் பிரச்சனைகளைத் தவிர்த்து ஆண்டு விழா ஒழுங்குகளை செய்யும் போது பல அனுபவங்களைப் பெற்று பொறுப்புணர்வுடன் சிந்தித்துச் செயலாற்றும் திறனை உடையவர்களாக உள்ளார்கள்.

இவ்விழாவை நல்லபடியாக நடத்துவதற்கு திறமை, பொறுமை, ஒழுக்கம் மற்றும் ஒற்றுமையும் தேவை. அவ்வொற்றுமை நம் யூச்சன் தமிழாலயத்தின் மாணவர்களிடையே இருக்கிறது. அது விழா ஒழுங்கு செய்யும் முறையில் மட்டும் தெரியவில்லை. அவர்கள் அணியும் மாணவர்சீருடையிலும் தெரிகிறது. சீருடையால் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மை ஏற்படாது. இதனால் ஒற்றுமை உணர்வும் அதிகரிக்கும்.

ஒரு குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு அகத்தியமோ அதே போல ஒரு மாந்தனுக்கு தனது தாய்மொழி இன்றியமையாதது. நாம் அணியும் ஆடையும் சொல்லும் ஊர்ப்பெயரும் எம்மை அடையாளம் காட்டாது. நாம் பேசும் மொழி தான் எங்களை தமிழன் என்று இனங்காட்டுகிறது. எனவே, எம் தாயக உறவுகளுடன் எம்மை ஒன்றினைக்கும் பாலமாக தமிழ்மொழி அமைகிறது. ஆதலால், நம் வேரை மறக்காமல் இருப்பதற்கும் தமிழினத்தின் சிறப்பை வெளியுலகிற்கு எடுத்துச்செல்வதற்கும் நாம் தமிழாலயத்திற்குச் சென்று தமிழ்மொழி கல்வி கற்பது அத்தியவசியமானது.

நன்றியுடன்
செல்வி கிருத்திகா கிருபாமூர்த்தி
ஆண்டு 11 மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Müssen wir im Ausland unsere Muttersprache beherrschen?
Das Besondere an den tamilischen Schulen

In seinem Gedicht „Oodidum Tamila" bittet der tamilische Dichter Ambi das tamilische Volk, das durch den Bürgerkrieg in Sri Lanka gezwungen ist, die Familie, das Haus und sein Vermögen in seiner Heimat zurückzulassen, beim Flüchten wenigstens die tamilische Sprache nicht zu vergessen und „mitzunehmen". Wahrscheinlich haben der Schulleiter der tamilischen Schule in Jüchen Herr Sivalingam und die dort unterrichtenden Lehrer diese Bitte zu Herzen genommen als sie diese Schule gründeten. Ihr Ziel ist es, die in Deutschland lebenden tamilischen Kinder ihre Muttersprache schätzen zu lehren und das Aussterben der tamilischen Sprache zu verhindern.

Doch viele in Deutschland lebenden Tamilen glauben, dass das Erlernen der Muttersprache für ihre Kinder nicht notwenidg ist, da sie wegen des Bürgerkrieges nicht in ihre Heimat zurückkehren werden. Einige Kinder behaupten, dass die deutsche Schule schwer genug sei und sie keine Zeit fänden auch noch für die tamilische Schule zu lernen. Wieso weigern sich Kinder und Eltern, die das Erlernen der deutschen Sprache und das Lernen für die deutsche Schule so wichtig sehen, die tamilische Sprache, ihre Muttersprache, zu lernen? Natürlich ist es für ein tamilisches Kind schwierig sich auf die deutsche und auf die tamilische Schule zu konzentrieren. Doch das Besuchen der tamilischen Schule neben der deutschen bringt zum größten Teil Vorteile mit sich.

Durch den Bürgerkrieg in Sri Lanka sind unsere Verwandte über die ganze Welt zerstreut. Doch finden wir immer wieder die Möglichkeit sie wieder zu sehen. Doch wie wollen wir uns z.B. mit Verwandten aus Frankreich unterhalten? Etwa auf Deutsch? Sie können doch kein deutsch! Und wir kein französisch! Die Konversation wäre somit nur auf tamilisch möglich.
In tamilischen Schulen lernen die Kinder nicht nur die tamilische Sprache kennen, sondern auch die Geschichte des Landes. Dadurch lernen die im Ausland lebenden Kinder die Heimat ihrer Eltern und dessen Geschichte schätzen.

Die tamilischen Schulen bringen ihren Schülern nicht nur etwas bei. Sie hilft ihnen auch ihre Fähigkeiten und Talente zu entdecken und diese weiterzuentwickeln. Die tamilische Bildungsvereinigung versucht dies z.B. durch Sprachwettbewerbe und Sportfeste zu erreichen. Gewinner dieser Wettkämpfe erhalten Urkunden, Medaillen und Pokale.

Auch die tamilische Schule Jüchen versucht ihre Schüler zum Lernen zu motivieren und organisiert regelmäßig kleine Wettbewerbe und vergibt Preise. Die Lehrer versuchen durch kleine religiöse Feste, die in der Schule veranstaltet werden, den Kindern die Kultur näher zu bringen. Die Festlichkeiten werden nicht wie gewohnt von der Schulleitung und Lehrern organisiert, sondern von älteren Schülern und Eltern. Hier wird deutlich, dass die Schulleitung auch die Schüler in jeder Entscheidung mit einbezieht und ihnen die Möglichkeit bietet mitzuwirken, eine Besonderheit der tamilischen Schule in Jüchen. Auch sieht man das jeden Sonntag um 9 Uhr, wenn die Schüler selbstständig mit einer Schweigeminute und Gebeten die Schule beginnen.
Nun feiern wir das 5 jährige Bestehen der tamilischen Schule in Jüchen. Der Schulleiter Herr Sivalingam überträgt die Verantwortung für diese Feier, die am 9 Oktober 2010 stattfindet, seinen Schülern und integriert sie somit in die Schulpolitik. Schüler erhalten die Möglichkeit ihre Wünsche und Ideen einzubringen, mit anderen Schülern, Lehrern und Eltern darüber zu diskutieren und auftauchende Probleme selbstständig zu lösen. Dadurch gewinnen sie an neue Erfahrungen und lernen für ihre Entscheidungen und Handeln Verantwortung zu tragen.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Um diese Feier Erfolgreich zu organisieren benötigt man Geduld, Disziplin und die Zuversicht, sich auf dem anderen verlassen zu können. Und natürlich das Gefühl der Zusammengehörigkeit. Die Schüler der tamilischen Schule in Jüchen halten zusammen. Dies wird nicht nur an der Organisation deutlich, sondern auch an ihrer Kleidung. Die Schüler tragen alle Schuluniform, die aus einem weißen Hemd, einer schwarzer Hose und einer blauen Krawatte besteht. Dies führt zu einer Gleichstellung der Schüler, welches das Zusammenleben der Schüler stärkt.
„Wie der Mensch als Säugling die Muttermilch braucht, so braucht er später seine Muttersprache".

Nicht die Kleidung die wir tragen oder der Name unsres Wohnortes sagt, wer wir sind, sondern die Sprache die wir sprechen. Tamil bildet eine Brücke zwischen uns und unseren Verwandten in Sri Lanka. Um unsere Wurzeln nicht zu vergessen und die Existenz unserer Sprache zu schützen, müssen unsere Kinder in die tamilische Schule und ihre Muttersprache lernen.

Kiruththika Kirubamoorthy
Schülerin der 11. Klasse

தாய்மொழி

தாய்மொழியே - எங்கள்
தமிழ்மொழியே –
தமிழர் தேசத்தின்
தங்கத் தமிழே - எங்கள்
இன்பத் தமிழே

பள்ளிப் பருவமதில் - நாம்
பைந்தமிழ் பயின்றிட - எங்கள்
செம்மொழியான செந்தமிழ் அறிந்திட
இன்சுவை கொண்ட
தேன் தமிழ் சுவைத்திட
தேடிச் செல்வோம் - நாம்
தமிழாலயங்கள் நோக்கி - எங்கள்
தமிழாலயங்கள் நோக்கி
தாய்மொழிக் கல்வி தந்திடும் - எங்கள்
தமிழாலயங்கள் நோக்கி

நன்றியுடன்

தமிழினி தணிகாசலம்
மாதங்கி மகாலிங்கம்.
அஸ்விகன் கிருபாமூர்த்தி.
கஜன் ஞானலிங்கம்.
4ம் ஆண்டு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்மொழிக்கல்வி

நான் ஜேர்மனியில் பிறந்தாலும், ஈழத்தமிழினத்தைச் சேர்ந்த எனது குடும்பம், ஈழமண்ணின் காற்றைச் சுவாசித்து அம்மண்ணில் வாழ்ந்தார்கள் என்பது பெருமைக்குரியதாகும்.
இங்கு நான் வாழிட மொழியில் கல்வி பயின்றாலும், தாய்மொழிக் கல்வியில் விருப்பம் கொண்டவளல்ல. பெற்றோரின் விருப்பின் பேரில் யூச்சன் தமிழாலயத்தில் தாய்மொழிக் கல்வி பயின்றேன். ஆரம்பத்தில் எனக்கு தமிழில் கதைப்பதும் படிப்பதும் என்றால் பிடிக்காத விடயமாக இருந்தது உண்மைதான்.
யூச்சன் தமிழாலயத்தில் தற்போது 6ம் ஆண்டில் படித்துவருகிறேன். இப்பொழுது எனக்கு தமிழ்படிப்பது, தமிழில் பேசுவது, என் குடும்பத்தாருடன் தாத்தா பாட்டி என்ற உறவுகளுடன் நான் தமிழில் கதைப்பது அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.
நான் இப்படி தமிழில் கதைப்பதற்கு தமிழாலயத்தில் தமிழ் கல்வி கற்றுவந்ததே காரணம். என்போன்ற தமிழ் இளஞ் சிறார்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் தமிழாலயம் சென்று தமிழ்க் கல்வி கற்று இன்று தாய்மொழியில் உரையாடுவதற்கு தமிழாலயங்களின் செயற்பாடுகளே காரணமாக உள்ளது. ஆகவே ஒவ்வொரு தமிழ் சிறார்களும் தமிழாலயங்கள் சென்று தாய்மொழிக் கல்வி பயில வேண்டும். தமிழில் பேச வேண்டும் என்பது என் எண்ணமும், ஆசையுமாகும். இவைகள் நடைபெற வேண்டுமானால் பெற்றோர்களது ஊக்கமும் ஒத்துழைப்பும் மிக அவசியம் என்பது என் கருத்தாகும்.

நன்றியுடன்
6ம் ஆண்டு மாணவி
செல்வி யதுர்'ா முருகதாஸ்

Früher an Später denken

Alles, was mit Finanzen zusammenhängt, aus einer Hand: Das macht das Leben einfacher für Sie. Mit unserem Allfinanzkonzept vereinen wir Aspekte wie Versicherung und Vorsorge, Anlage und Absicherung, Investment und Immobilien. Umfassend, ganzheitlich und immer persönlich.

So kommen Sie zu einer optimierten Vermögensplanung.

Regionalgeschäftsstellenleiter für
Deutsche Vermögensberatung

Ihr Vermögensberater:
Mohan Ratnasabapathy
Rudolf-Diesel Str. 1
69234 Dielheim
Telefon: 02159 5379621

Früher an Später denken!

Deutsche Vermögensberatung

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ஆலயம்

ஞாயிறு தோம் தேவாலயம் செல்கிறார்கள்.
நாங்கள் தமிழாலயம் செல்கிறோம்.

அங்கே தேவனை வாழ்த்திப் பாடுகிறார்கள்.
நாங்கள் தமிழை வாழ்த்திப் பாடுகிறோம்.

அங்கே வேத வாக்கியங்கள் விதைக்கப்படுகின்றன.
நாங்கள் தமிழ் வாக்கியங்கள் விதைக்கின்றோம்.

அங்கே அழகான பூக்கள் பறிக்கப்பட்டு
ஆண்டவனடியில் போடப்படுகிறது.
இங்கே பூஞ்செடிகளே எம்முன்னால்
பூத்துக் குலுங்குகின்றன.

அங்கே மனிதன் மட்டும்தான் பேசுவான்.
இங்கே தெய்வங்களும் பேசும்.

அங்கு பெறுபேறு கிடைப்பதில்லை.
இங்கே பெறுபேறுகள் கிடைக்கும்.

தமிழில் கலந்து தமிழில் கரைந்து
எம்மினத்தோடு மகிழ்ந்து - எம்
எதிர்காலச் சந்ததியை ஏற்றுவதில்
கிடைக்கும் மகிழ்ச்சி தேவாலயத்தில்
கிடைக்கிறதோ இலையோ - எங்கள்
தமிழாலயத்தில் கிடைக்கிறது.

நன்றியுடன்

பெற்றோர் சார்பு நிர்வாகிகள்
திருமதி உருத்திரகுமார் (2005 – 2006)
திரு. முருகதாஸ் (2006 - 2007)
திருமதி. பாபு கீதா (2007 - 2010)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு

ஞாயிறு என்பது சூரியன். உலகிற்கு இருள் போக்கி ஒளிபடைப்பவன். ஞாயிறு என்ற பெயர் கொண்டவன் செயலிது. எமக்கு ஞாயிறு தந்த தாய்மொழிக் கல்வி தமிழாலயங்கள். ஞாயிறு என்றால் தமிழாலயம் என புதிய பொருள் படைப்போம். தாய்மொழிக் கல்வியில் இருள் சூழ்ந்த எங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தந்த ஒளிதான் எங்கள் தமிழாலயம். அதுவும் ஜேர்மனியின் முதலாவது தமிழாலயம். புலம் பெயர் தேசத்தில் பெரு-மைக்குரிய தமிழாலயம் தந்த யூச்சன் நகரிற்கும் எங்கள் தமிழாலயம் புகழ் சேர்த்து நிற்கின்றது. எமது தமிழாலயம் புலம் பெயர் தேசத்து தமிழாலயங்களிற்கு தொடக்கப் புள்ளியாக இருந்து, இன்று பல கிளைகள் தோற்றம்பெற காரணமாக அமைந்தமை எங்களுக்கெல்லாம் பெருமையே.

அன்று பல அறிவாளர்கள், மொழி இன உணர்வாளர்களால், ஆரம்பிக்கப்பட்டு இன்று பழையன போதலும் புதியன புகுதலும் ஆக செயற்பாடுகள் நடந்து கொண்டுதான் உள்ளது. ஞாயிறு தந்த எங்கள் தமிழாலய வளர்ச்சி இன்று பன்மடங்கு பெருகி பல ஆயிரம் சிறார்கள் தாய்மொழிக் கல்வி பயில்வது எம் போன்ற சிறார்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது. தாய்மொழிக்கல்வியில் நாம் தளிர் நடை போட உதவிய சகல ஆசான்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றிகள். எங்கள் தாய்மொழிக் கல்வியினால் அன்பு, பண்பு, கலை, கலாச்சாரம், குமுகாய வளர்ச்சிகள் பற்றி அறிந்து நாமும் தமிழ் சான்றோராக வரமுடியும் என நாங்கள் திடமாக நம்புவோம். அதன் படி ஞாயிறு தந்த தமிழாலயங்களை நாமும் சிறப்பாக வளர்த்து எம் போன்ற சிறார்கள் மேலும் நன்மை பெற முடியும் என நம்புவோமாக. ஞாயிறு தந்த எங்கள் தமிழாலயங்கள் தனது இலக்கு நோக்கி வெற்றி நடை போட நாமெல்லாம் கை கொடுப்போம்.

நன்றியுடன்
கௌசிகா தயானந்தன்
ஆண்டு 6 மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிந்தனை

எமது இனம் தமிழினம். எமது மொழி எமது இனத்திற்கு என அன்று வகுக்கப்பட்ட எமது வாழ்வியல், பண்பாடு, உலகில் சிறந்ததாக உள்ளதென நாம் பல நூல்களில் படித்து அறிந்துள்ளோம். அதன்படி நாம் சமூகத்தில் சேர்ந்து வாழும் பொழுது நான் ஒருவனுக்கு படித்த கல்வியறிவு பயன்பாட்டை தருகின்றது. அதுவும் எமது தாய்மொழிக் கல்வியில் பண்பாடு என்ற பகுதியில் விருந்தோம்பலின் பெருமைகள் பற்றி சிறப்பாக எமக்கு அறியத்தந்துள்ளார்கள் அதன்படி ஒருவன் சிறந்த விருந்தோம்பலின் பண்பாளனாக இருந்தால் அவன் "நல்விருந்து வானத்தவர்க்கு" என்ற கூற்றுக்கிணங்க தேவர்களுக்கு விருந்தாளியென அழகாக கூறப்பட்டது. இந்தப் பெருமை எமது இனத்தின் பண்பாட்டின் சிறப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

எமது குமகாயத்தில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு எமக்கு நற்சிந்தனை வேண்டும். ஒருவனுடைய நற்செயல் பிறருக்கு நல்லதாகவும் தீய செயல்கள் தீயனவாகவும் இருக்கும் பொழுது. அவைகளை எதிர்கொள்வற்கு எமக்கு நற்சிந்தனைகள் வரவேண்டும். அப்போதுதான் மனங்களில் அன்பு ஊற்றெடுக்கும் அதன் போது மனங்களில் கடவுளைத் தியானிக்கும் மனப்பக்குவம் ஏற்படும். அதன் போது தான் எமது மனம் நல்ல நோக்கங்கள் சிந்தனைகள் செயற்பாடுகளில் செல்வதற்கும், சமூகத்தில் உயர்ந்து நிற்கவும் அடித்தளமாக உதவுகின்றது. ஆகவே நாம் எல்லோரும் நற்சிந்தனை உடையவராக நல்ல பண்பாடுகளை பின்பற்றவும் எமது தாய்மொழிக்கல்வி உதவிபுரிகின்றது. ஆகவே எம்போன்ற சிறார்கள் சான்றோர் தந்த அறிவியலை படித்து நற்சிந்தனை உடைய-வராக வாழவேண்டும். நற்சிந்தனை என்பது நற்பண்புகளின் வேர்கள். எனவே நாம் எமது தாய்மொழிக்கல்வி கற்று நற்சிந்தனை உடையவராக வாழவேண்டும் என்று தமிழன்னை மீதுள்ள பற்றினால் தமிழரின் பெருமையை சேக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றியுடன்
செல்வி பிரியங்கா பரமேஸ்வரன்
ஆண்டு 6 மாணவி

கணபதி தமிழ்கடை
Kiosk und Asialebensmittel

இலங்கை இந்திய கடலுணவுப் பொருட்கள் வியாழன் தோறும் உடன் மரக்கறி வகைகள் தொலைபேசி அட்டைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Kanapathi Kiosk
Odenkirchener Straße 124
41236 Mönchengladbach
Tel.: (02166) 139903

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்நிலை - 1



வளர்நிலை - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்நிலை - 3

வளர்நிலை - 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆண்டு - 5



ஆண்டு - 6 ஆசிரியையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு - 6 நிர்வாகியுடன்

ஆண்டு - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆண்டு - 8

ஆண்டு - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு - 11

ஆண்டு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியையுடன் மாணவர்



பழைய மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாக செயற்பாட்டாளர்கள்

பெற்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பணி தொடர வாழ்துகின்றேன்.

உலகில் ஆதிமொழிக் குடும்பங்களான சீனம், சித்தியம், சுமேரியம், திராவிடம், இந்தோ-ஆரியம் என்பவற்றிலிருந்து ஏறத்தாழ ஏழாயிரம் மொழிகள் கிளைவிட்டுள்ளன. இந்த ஆதிமொழிக் குடும்பங்களில் ஒன்றான திராவிடத்தில் தமிழ் தொன்மையானது, செம்மையானது என்பதை ஈராசுபாதிரியார் முதல் அறிஞர் கால்டுவெல்வரை நிறுவியுள்ளனர். இறுதியாக இருபதாம் நூற்றான்டின் இறுதிக் காலத்தில் பல மொழிகளை ஆய்வுசெய்த மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் உலகின் முதன்மொழி தமிழே என்று நிறுவினார்.

இம்மொழிக்குரிய தமிழினம் சிங்களன் சதிக்குள் சிக்குண்டு சிதறிப் புலம்பெயர்ந்து புலம்பெயர்ந்த தேசத்தில் அகப்புறச் சூழல்களின் தாக்கத்துக்குள் பலசுமைகளைத் தாங்கித் தரணியின் பல பாகங்களில் வாழ்ந்தாலும், தமது இன அடையாளத்தைத் தக்கவைத்து வாழ்கின்றனர். இந்தவகையில் யேர்மனியில் தமிழ்க் கல்விக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் தமிழாலயங்கள் தமிழ்ச்சிறார்களுக்கு தமிழ்மொழி, கலை, கலாச்சாரம் என்பவற்றை ஊட்டுவதில் ஐரோப்பாவில் முதன்மை வகிக்கின்றது.

இன்று தனது ஐந்தாவது அகவையை நிறைவு செய்யும் யூச்சன் தமிழாலயம் பல மாணவர்களை சிறந்த முறையிற் பயிற்றுவித்து நல்ல தேசப்பற்றுள்ளவர்களாக வளர்த்துவிட்டது. இத்தமிழாலயத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருப்பவர் நிர்வாகி தம்பையா சிவலிங்கமாவார். இவருடன் இணைந்து இத்தமிழாலய ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரும் சிறந்த முறையிற் தமது பணிகளைச் செய்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இத்தமிழாலய மாணவர்கள் தமிழ்க் கல்விக் கழகம் நடாத்தும் பொதுத்தேர்வு, தமிழ்திறன்போட்டி, விளையாட்டுப்போட்டி, கலைநிகழ்வுகள் யாவற்றிலும் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படித்தியுள்ளனர். யூச்சன் தமிழாலயம் இன்னும் பல மாணவர்களை உள்வாங்கி அவர்களை ஆற்றல்மிகுந்தவர்களாகவும், அறிவிற் சிறந்தவர்களாகவும், தமிழின உணர்வாளர்களாகவும், தாயகப்பற்றாளர்களாகவும் உருவாக்க வேண்டுமென உவகை பொங்க வாழ்த்துகின்றேன்.

வாழ்க தமிழாலயம்! தொடர்க உங்கள் பணி!

நன்றி

செ.தெய்வேந்திரன்
மத்திய மாநில செயற்பாட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்

ஜேர்மன் தமிழ்க் கல்விக் கழகத்தின் 130 தமிழாலயங்களுள் ஒன்றான யூச்சன் தமிழாலயம் 2004ம் ஆண்டு 45 மாணவர்களுடனும் 7 ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று 50 மாணவர்களுடன் 12 ஆசிரியர்களுடனும் 3 துணை ஆசிரியர்களுடனும் 9.10.2010ல் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுகின்றது. எமது தமிழினம் உலகெங்கும் கல்வி கலை கலாச்சார விழுமியங்களைப் பேணிவருபவர்கள் கல்வியில் சிறந்து விளங்குபவர்கள். இன்றையசமகாலச் சூழலில் தமிழ்க் கல்விக் கழகத்தின் கல்விப்பணிக்கு ஒரு சிலர் இடையூறுகளை ஏற்படுத்தி புலம் பெயர்ந்த மாணவர்களின் தமிழ் வளர்ச்சிக்கு தடையாக இருந்து வருகின்றனர். தமிழ் மொழியானது எமது இனத்தை அடையாளம் காட்டுவது தாய்மொழியாகத் திகழ்வது, தொன்மையானது, இனிமையானது, இலக்கணவளம்நிறைந்தது. இத்தனை உயர்வான தமிழ்மொழியை போற்றி பாதுகாக்க வேண்டும். இந்தவகையில் யூச்சன் தமிழாலயத்திலும் தாய் மொழிக்கல்வியுடன் சுற்றாடல் இசை நடனம் போன்ற போதனைகள் நடைபெற்று மாணவர்கள் நற்பண்பு நிறைந்தவர்களாக விளங்குகின்றனர். மேலும் பொதுத்தேர்வு தமிழ்த்திறன்போட்டி, உதைபந்தாட்டப்போட்டி, விளையாட்டுப்போட்டி போன்றவற்றில் பங்குபற்றி பர-ிசில்களைப் பெற்று தமிழாலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளனர். நடைபெறுகின்ற எல்லா நிகழ்வுகளின்போது பெற்றோர்கள் ஆசிரியர்கள் நிர்வாகியுடன் இணைந்து ஒற்றுமையாக செயல்படுவது இவ்வாலயத்தின் போற்றுதற்குரிய விடயமாகும். நிருவாகத்திறனாலும் ஆசிரியர்களின் தூயபணியினாலும் பெற்றோரின் ஒத்துழைப்பினாலும் மாணவர்களின் ஆற்றலினாலும் ஐந்து ஆண்டுகளாக தமிழில் உயர்ந்து நிற்கும் இவ்வாலயம் பொலிவும் புகழும் பெற்று மத்திய மாநிலத்திலே ஓர் முன்னோடித் தமிழாலயமாக மிளிர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

க.திருநாவுக்கரசு
மாநில செயற்பாட்டாளர்
தமிழ்க் கல்விக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைத் தமிழாலயமும் நாங்களும்...

ஜேர்மன் நாட்டில் நாங்கள் பிறந்து, ஜேர்மன் மொழியில் கல்வியைத் தொடர்ந்தாலும், ஈழத் தமிழினத்தைச் சேர்ந்த குடும்பத்தில் நாங்கள் பிறந்தது எங்களுக்குப் பெருமையே. எங்கள் தாய்மொழி தமிழ் மொழியாகும். ஆரம்பத்தில் தமிழ் படிப்பதில் நாங்கள் விருப்பின்றி இருந்தாலும் எங்கள் பெற்றோர்களது முயற்சியினால் நாங்கள் தமிழ்க் கல்வியினை வேண்டா வெறுப்பாக வீட்டில் கற்றோம். “அ“ என்று தொடங்கி உயிர் மெய் எழுத்துக்களைத் தெரிந்து கொண்டதன் பின் யூச்சன் தமிழாலயத்தில் சேர்ந்து தமிழ்மொழிக் கல்வியினை தொடந்தோம். அங்கு தான் அழகு தமிழின் இனிமையை நன்றாகச் சொல்லித் தந்தார்கள். நாங்களும் நாளடைவில் விருப்புடன் தமிழை நன்றாகப் படித்தோம். அவ்வேளையில் நாங்கள் தமிழில் கதைப்பது எங்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. அங்கு சென்று கல்வி கற்கும் மாணவ சகோதர சகோதரிகளுடன் தமிழ்மொழியில் கதைக்கும் போதும் ஆசிரிய ஆசிரியைகளின் துணை கொண்டு கற்கும் போதும் எங்கள் தாய்மொழி பற்றியும் அதன் சிறப்பு பற்றியும் இன்னும் இன்னும் கற்றுத் தெரிய வேண்டும் என உள்ளம் துடிக்கின்றது. ஆண்டு மூன்றை நிறைவு செய்து நான்காம் ஆண்டில் காலடிவைக்கும் வேளையில் தமிழ்மொழியில் எங்களை எழுதச் சொன்னால் எப்படி எழுதுவோம்?

கற்றது கைமண்ணளவு கூட இல்லையே?
கற்க இருப்பது உலகைவிடப் பெரியதல்லவா...

எப்படி இருப்பினும் தமிழாலயம் சென்று எங்கள் தாய்மொழியாம் தமிழ்மொழியை நன்றாகப் படித்து அனைத்தையும் கற்றுத் தெரிந்து நாங்களும் தமிழ் கற்பிக்கும் ஆசிரியையாக வரவேண்டும் என்று எங்களுக்குள் ஓர் ஆசை. தாய்மொழியை கற்பிக்கும் தமிழாலயமே!
உன்னை நேசிக்கின்றோம். தாய்மொழி கற்க வரும் உன் குழந்தைகளை உன் அரவணைப்பால் கல்வி, கலை, கலாச்சாரம் கற்றுத்தந்து சிறந்த கல்விமான்களாக உருவாக்குவாய் என வேண்டுகிறோம். தமிழாலயமே நீ வாழ்க பல்லாண்டு வளர்க உன் புகழ்.எங்கள் அன்னையின் மொழியாம் தமிழை படி, படி என்று தூண்டிய அம்மா, அப்பா அவர்களோடு புனித சேவை செய்யும் ஆசிரிய ஆசிரியை, நிர்வாகிகள் அவர்கள் அனைவரும் தமிழாலயத்தின் தூண்களாக இருப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. தாயே எம்போன்ற சிறுவர்களுக்கு நல்வழிகாட்டி தமிழ்மொழிக் கல்வியில் மேம்படுத்துவாயாக
வாழ்க தமிழாலயம், வளர்க தமிழ்மொழி

வி. ஜீவிகா
வி. ஜோதிகா
வளர்நிலை 3 மாணவிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தமிழாலய அனுபவங்கள்

கல்வியும் கலையும் நம் இரு கண்கள், நம் தமிழ்மொழி எங்கள் உயிராகும், என்ற உன்னதவரிகளை ஒவவொரு ஞாயிறும் பள்ளி ஆரம்பமாகும் முன் கேட்டும், மனதார நேசித்தும் வருகின்றேன்.
இவ் வரிகளையும், தமிழ்த்தாயின் சிறப்பையும் ஜேர்மன் நாட்டிலுள்ள நூற்றிமுப்பது தமிழாலய மாணவ மணிகளும், ஆசிரிய வழிகாட்டிகளும் கேட்டு மகிழ்வதை எண்ணி என் தாய்மொழியாம் தமிழுக்கு உயிர்தந்த சான்றோர்களை வாழ்த்தியும் வணங்கியும் வரைகின்றேன் என் அனுபவங்களை.

நான் எனது ஆரம்பதமிழ் கல்வியை முஞ்சன்கிளட்பாக் தமிழாலயத்தில் தொடங்கி பல ஆண்டுகள் நன்றாக பயின்றுவந்தேன்.இவ்வேளையில் என் பெற்றோர் தங்கள் வாழிடத்தை யூச்சன் நகரததிற்கு மாற்றிக் கொண்டார்கள். இம்மாற்றம் என் மனதுக்கு மிகவும்வேதனையே. என் ஆரம்பப்-பள்ளித்தமிழ்த்தோழிகள், ஆசிரியர்கள், என் ஆரம்பப் பள்ளியின் இனிமையான அனுபவங்கள். மாற்ற வேண்டுமே என தடுமாறினேன். இந்நிலையில் என் பெற்றோர்கள் யூச்சன் தமிழாலயத்தில் என் தமிழ் கல்வியைத் தொடர ஆவன செய்தார்கள். யூசசன் தமிழா-லயமோ, இரண்டுவாரத்துள் எனக்கு புத்துயிர் பிறக்க வைத்தது. என் தாயாரும் எனக்கு மிகவும் சிரத்தையுடன், தாய்மொழியின் சிறப்பையும், பாடங்களின் நுணுக்கங்களையும் அறிய மிகப் பெரிய ஊன்றுகோலாக இருந்தார். எனது உயர்வகுப்பில் புதிய புதிய மாணவமாணவிகள், வேறு பாடசாலையிலிருந்தும் வந்து சேர்ந்தார்கள்.
அவர்களை அன்புடன் வறவேற்ற தமிழாலயம் தமிழ்க்கல்வியைத் திறமாகவும், அன்புடன் அரவணைத்து கட்டுப்பாடுடன் கற்பித்தார்கள்.அந்நல்வழி காட்டிய ஆசிரிய பெரியோர்களை என் மனதார வாழ்த்தாதுவிட்டால் அது நான் செய்த குற்றமல்லவா! அவ்வாறே பெறறோர்களும் நிர்வாகத்துடன் இணைந்து எம் தமிழாலய வளர்ச்சிக்கு பெரும் பணி செய்கின்றனர்.
என் சகமாணவமாணவிகளின், கடும்முயற்சியினாலும், ஆசிரியர்களின் ஆணித்தரமான செயற்பாட்டினாலும், 10 மாணவ மாணவிகள் இவ்வைந்தாண்டில் ஆண்டு, பதினொன்றை நிறைவு செய்துள்ளார்கள். அவர்களில் நானும் ஒருத்தியே. ஒவ்வொரு ஞாயிறும், எம் தமிழாலயம் நடைபெற மூலகாரணமாக இருந்த, நிர்வாகிகள், ஆசிரிய ஆசிரியைகள் 6மணித்தியாலம், எங்களுடன் அன்போடு பெறறோர்களாக இருந்து, ஊட்டிய தீந்தமிழமுதை சுவையோடு உண்டேன்.
அதன் பயனே இன்று உங்கள் முன், பல தமிழ் மாணவமணிகளை உருவாக்கும் பணியாம், ஆசிரியப் பணியை நான் ஏற்றுள்ளேன். இப்பணியானது நான் கற்ற தமிழாலயம் தந்த பாக்கியமே. இது போன்று எல்லா மாணவமணிகளும் தாய்மொழியாம், எம் தமிழ்மொழியை கற்றுணர்ந்து, எம் தமிழாலயத்தின் பெயரையும் புகழையும் உயர்த்த வேண்டுமென வேண்டி பெருமகிழ்வுடன் விடைபெறுகின்றேன்

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்கு தக.

க. லக்சுஜா
ஆண்டு 12 மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் மொழி வளர...

உலகின் முதல் மொழி - எம்
உணர்வின் உயிர்மொழி
உலகு புகழ் நன்னூல். தந்த
உயர்வான செம்மொழி

எனும் பெருமைக்குரிய தமிழ்மொழிதான் எங்கள் தாய்மொழியாகும். புலம்பெயர்ந்து வாழும் எம்மிளஞ் சிறார்களின் தாய்மொழிக் கல்வியின் தேவை கருதி, ஜேர்மனியில் தமிழ்க் கல்விக் கழகத்தினாலும், மொழி, இன உணர்வாளர்களினாலும் முதல் தமிழாலயமாக 1989ம் ஆண்டு யூச்சன் நகரில் உருவாக்கப்பட்டது தான் யூச்சன் தமிழாலயம். இது காலத்தின் தேவை கருதி ஓர் உயர்ந்த இலட்சியம் கொண்ட கட்டமைப்பாக பின்னாளில் தோற்றம் பெற்றிருப்பதை இன்று நாம் ஜேர்மனியின் பல இடங்களிலும் காணக் கூடியதாக உள்ளது. எங்கள் தமிழாலயம் கருத்துமோதல்கள் காரணமாக சில காலம் தனித்து இயங்கினாலும் மீண்டும் நிர்வாக மாற்றங்களினூடாக 2004ம் ஆண்டு தமிழ் கல்விக் கழகத்துடன் இணைந்து தன் பணியைத் தொடர்ந்து, இன்று ஐந்தாவது ஆண்டு நிறைவினை சிறப்பாகக் கொண்டாடி மகிழ்வதற்கு முன்னெடுத்து வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியதே. எங்கள் தமிழாலயத்தில் 50 மாணவமாணவியர்கள் தமிழ்க் கல்வி கற்று வருகின்றார்கள். இவர்கள் வருடந்தோறும் தமிழ்க் கல்விக்கழகத்தினால் நடாத்தப்படும் தமிழ்மொழிப் போட்டிகளிலும் பங்கு கொண்டு சிறந்து விளங்குகின்றார்கள். அதுமட்டுமின்றி மெய்வல்லுனர் போட்டிகள், மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டிகள் என்றும் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிக் கொணர்ந்துள்ளார்கள். எங்கள் தமிழாலயத்தின் பழைய மாணவர்களும் இன்று பல விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிகள் பெற்றுள்ளதை இன்றும் நாம் நினைத்துப் பார்த்துப் பெருமை கொள்கின்றோம். தமிழ்ச் சிறார்கள் தாய்மொழிக் கல்வியினை **"ஐயந்திரிபுற கற்றுணர்ந்து"** என்ற கூற்றுப்படி மிகத் தெளிவான விளக்கங்களுடன் நல்ல நல்ல நூல்களைப் படித்து தங்கள் தமிழ்மொழி அறிவினைப் பெருக்கிக் கொள்ள தமிழாலயங்கள் ஆற்றிவரும் பணியினைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஆகவே யூச்சன் தமிழாலயம் மேன் மேலும் வளர்ச்சிபெற்று, தாய்மொழிக் கல்வி கற்பித்தல் எனும் உயர்ந்த நோக்கு வெற்றி பெற அனைத்துப் பெற்றோர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும், நிர்வாகச் செயற்பாட்டாளர்களும், நிர்வாகத்திற்கு தங்கள் ஒத்துழைப்பினை முழு மனதுடன் நல்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, எனது மனப்பூர்வமான ஒத்துழைப்பையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

வாழ்க தமிழ்...வளர்க தமிழாலயம்

திருமதி. கிருஷ்ணகுமாரி மகாலிங்கம்
வளர்நிலை 3 ஆசிரியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிகள் பல

பேரன்பு மிக்க இதயங்கள் அனைத்துக்கும்! என் இருகரம் கூப்பிய சிரந்தாழ் வணக்கங்கள். யூச்சன் தமிழாலயம் தன் ஐந்தாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் இவ் வேளையில், அவ் நிறைவினில் அகமகிழும் பெற்றோர், மாணவர்கள், ஆசிரியர்கள், நிர்வாக உறுப்பினர்கள் முதலான அனைவருடனும் என்னையும் இணைத்துக் கொள்வதில் உள்ளம் பூரிக்கின்றேன். அந்நிய மண்ணில், வேகம் நிறைந்த வாழ்வியலில் வெவ்வேறு சிரமங்களுக்கு மத்தியில், திடமாக உழைத்து, பல காலம் முயன்று, ஐந்தாண்டுகளை வென்ற நிர்வாக உறுப்பினரதும், ஆசிரியர்களதும் பணி என்றென்றும் போற்றுதற்குரியதாகும். இதுபோல மேலும் பலகாலம் அவர்தம் பணி சிறக்க, தமிழ் மாணவர் சமூகம் பயனடைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டுமென வேண்டி வாழ்த்துகின்றேன்.

பா. சூரியகுமாரன்
யூச்சன் ஈழத்தமிழர் ஜேர்மனியர்
நட்புறவுக் குழு பொறுப்பாளர்

தமிழ்க் கல்விக்கழகத்தால் நடாத்தப்பட்ட தமிழ்த்திறன்போட்டியில் ஜேர்மன் ரீதியில் கலந்து கொண்டவர்கள்:

தமிழ்த்திறன் போட்டி 2007-2008

மாணவர் பெயர்	வயதுப்பிரிவு	போட்டி	நிலை
கதீச்சன் சிவலிங்கம்	18-19	கவிதை	ஐந்தாம் இடம்

தமிழ்த்திறன் போட்டி 2008-2009

மாணவர் பெயர்	வயதுப்பிரிவு	போட்டி	நிலை
கிருத்திகா கிருபாமூர்த்தி	18-19	திருக்குறள் மனனம்	நான்காம் இடம்
கிருத்திகா கிருபாமூர்த்தி	18-19	கவிதை	முதலாம் இடம்

தமிழ்த்திறன் போட்டி 2009-2010

மாணவர் பெயர்	வயதுப்பிரிவு	போட்டி	நிலை
நிவேதிகா கிருபாமூர்த்தி	17-18	ஓவியம்	நான்காம் இடம்
கிருத்திகா கிருபாமூர்த்தி	19-20	திருக்குறள் மனனம்	இரண்டாம் இடம்
கிருத்திகா கிருபாமூர்த்தி	19-20	கட்டுரை	இரண்டாம் இடம
கிருத்திகா கிருபாமூர்த்தி	19-20	கவிதை	இரண்டாம் இடம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் ஆளுமையை...

„இளமையில் கல்வி சிலையில் எழுத்தாகும்“ என்பதற்கிணங்க இளமைப் - பருவத்தில் கற்கும் கல்வி கல்லிலே செதுக்கிய எழுத்துப்போல் என்றும் அழியாதிருக்கும்.

ஈழமண்ணைவிட்டு, உறவுகளை பிரிந்து, அன்னிய நாடுகளில் வாழும் எமது பெற்றோர், உறவினர் தம் பிள்ளைகளுக்கு தாய்ப்பாலுடன் தமிழையும் சேர்த்து ஊட்ட வேண்டும் என்று பெரும் ஆவலுடன் செயற்பட்டு வருகின்றனர். அன்னை மொழியாம் தமிழ். மொழியை நாம் இன்று இரண்டாம் தரமொழியாகவே கொண்டுள்ளோம். எனினும் தமிழ்க் கல்விக் கழகத்தின் செயற்பாட்டின் மூலம் பல தமிழாலயங்கள் நிறுவப்பட்டு, சிறந்த முறையில் நிர்வாகிக்கப்பட்டு, புலம் பெயர்ந்த சிறுவர்கள் சிறப்பாக தமிழ்மொழியைக் கற்றுக் கொள்ள வழிகாட்டியுள்ளார்கள். ஒரு குழந்தை தாயிடம் தனது பரிமாண உணர்வுகளை வெளிப்படுத்த எவ்வாறு தாயுடன் சேர்ந்து மொழியைக் கற்க முயல்கின்றதோ, அதே போன்று தமிழாலயங்களும் தம் கடமைகளை வளர்க்கும், வளர்ந்து கொண்டிருக்கும் இளந்தமிழ்ச்சிறார்களுக்கு எழுத, வாசிக்க, தமிழ்த்திறன் போட்டிகள், தேர்வுப் போட்டி, புலன்மொழித் தேர்வு எனப்பல போட்டிகள் ஒரு தாயின் இடத்தில் இருந்தே எம்மை வளர்த்துக் கொண்டு வருகின்றது.

எமது உறவுகள் இன்று உலக நாடுகளில் பரந்து வாழ்கின்றனர். ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தாய்மொழியைக் கொண்டுள்ளது, எம் உறவுமுறையைக் கொண்டாடி உறவுகள் மேம்பட இன்று தமிழ் சிறந்த ஊடகமாக விளங்குகிறது. ஒரு இனத்தின் அடையாளம் தெரிவதற்கு அவ் இனத்தின் மொழி, கலாச்சாரம், பண்பாடு என்பவை முக்கிய இடம் பெறுகின்றது. கலாச்சாரம் மாறும் பண்பு கொண்டது, ஆனால் மொழி மாறாத்தன்மை உடையது. அதை மாற்றவும் முடியாது.

„எங்கள் தாய்மொழி தானே“ என்ற அலட்சியப் போக்கே இன்று பல மாணவர்கள் மத்தியில் விளங்குகின்றது. அது தவறு! அந்த அறியாமையும், அலட்சிய போக்குமே இன்று பல மாணவர்கள் தமிழ் பேசக்கூடத் தெரியாத நிலையை உருவாக்கியுள்ளது. அலட்சியம் வேண்டாம் மாணவர்களே! எம் தேசத்திற்கும், நேசத்திற்குரிய மாணவர்களே! நீங்கள் எதற்கும் அஞ்சாதீர்கள்! உலகில் சாதனை படைத்து அழியாப் புகழ் படைத்தவர் எல்லோரும் உங்களைப் போன்றவர்களே! எனவே நீங்களும் முயற்சி செய்யுங்கள். தமிழில் நாம் ஆளுமையை வளர்த்துக் கொள்ள முடியும் என்பது நிச்சயம். வெற்றியும் பெறலாம்.

ஆண்டு 8 மாணவர்கள்
சியாந்த் சிவகுமார்
சாகித்தியன் சந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றெழுத்துச்சுடர்

அன்னை தந்த அன்பும் மூன்றெழுத்தே
அவள் ஈந்த அமுதும் மூன்றெழுத்தே
மழலைகளாக நாம் மலர்வதற்கும்
அண்ணா அக்கா தம்பி தங்கை என்ற மூன்றெழுத்தில் –
நேசம் நட்பு பாசம் என்ற மூன்றெழுத்து பிறக்கும்.
பள்ளியெனும் கோயில்கண்டு கல்வியெனும்
பயிர் வளர்த்தால் அறிவு எனும் மூன்றெழுத்து உருவாகும்.
கல்வியிலே வாய்மை என்ற மூன்றெழுத்தை – உயிர்
என்ற மூன்றெழுத்தாய்க் கொண்டால் உயர் புகழ்
என்ற மூன்றெழுத்தைப்பெற்று ஞானம் என்ற நற்சீர் பெறலாம்.
கடமை என்ற மூன்றெழுத்தைக் கொண்டு
பெருமை என்ற மூன்றெழுத்தைப்போற்றி
துணைவி எனும் துணையைக்கொண்டு
அறம் பொருள் இன்பம் கண்டு
குறள் காட்டும் நெறியுடன் வாழலாம்.
கவிதை என்ற மூன்றெழுத்தால் அண்ணா அக்கா
தம்பி தங்கையரை வாழ்க என்ற மூன்றெழுத்தால் வாழ்த்தி
நன்றி என்ற மூன்றெழுத்தைக்கூறி
சுபம் என்ற மூன்றெழுத்தோடு நிறைவு செய்கிறேன்.

நன்றியுடன்

அனுசியா பத்மநாதன்
ஆண்டு 9 மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வல்லுனர் போட்டிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வல்லுனர் போட்டிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்வல்லுனர் போட்டிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழாலய உதைபந்தாட்ட அணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதனால் பெற்ற இன்பம்

"தாம் இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

(திருக்குறள், குறல்இல. 399)

நான் யூச்சன் தமிழாலயம் ஆண்டு 11இல் தமிழ் கற்கும் மாணவி. வாராவாரம் அங்கு தமிழ் கற்பதுடன் பல அனுபவங்களை சந்திக்கின்றேன். ஆரம்பத்தில் நான் தமிழாலயம் செல்வது காலத்தை வீண் விரையம் செய்வதற்காகவே என நினைத்தேன். ஆனால் காலஓட்டத்தில் நான் நினைத்தது எவ்வளவு தவறு எனப் புரிந்து கொண்டேன். தமிழ-ாலயத்தில் நான் தமிழ் படிப்பது மட்டுமல்லாமல், தமிழின் சிறப்பையும், இனிமையையும் புரிந்து கொள்ள தொடங்கினேன். காரணம், மாணவர்கள் மனநிலையறிந்து, நகைச்சுவை உணர்வோடு எமக்கு தமிழ் ஊட்டிய ஆசான்கள் என்றால் அது மிகையல்ல.

தமிழாலயம் செல்வதற்கு முன் நான் தமிழை தனிமொழியாய் பார்த்தேன். இப்பொழுது தமிழை ஓர் கலையாய் பார்க்கிறேன். துமிழ் படிப்பதால் பெறும் செல்வத்தை உணர்ந்து கொள்கின்றேன். அதோடு நாம் இங்கு மரபுவழியாக கொண்டாடிவரும் திருநாட்களில் எல்லோரும் ஒன்றுகூடி மகிழ்ந்து கொண்டாடுகிறோம். இதில் நாம் நமது கலாச்சாரப் பண்பாடுகளை அறிவதோடு நமது திறமைகளையும் வெளிப்படுத்த முடிகிறது.

தமிழாலயம் நடைபெறும் நாட்களில் மட்டும்தான் மற்றைய மாணவர்களோடு தமிழ் பேசும் வாய்ப்பு உருவாகிறது. மாணவர்களாகிய நமக்கு, தாய்மொழி அறிவையும் தமிழ்க் கலாச்சாரத்தையும் வளர்த்துக்கொள்ளும் இடமாகவும், நமது தமிழ் உறவுகளையும், நட்புக்களையும் வளர்த்தெடுப்பதற்கான ஓர் பாலமாகவும் தமிழாலயம் அமைகின்றது. இங்கு கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை கற்றுக் கொள்வதுடன், கலாச்சார சம்பிரதாயங்களை அறிந்து பாதுகாத்துக் கொள்ள முடிகிறது. இதன் பயனாக, ஜேர்மன் பாடசாலையிலோ அல்லது ஜேர்மன் நண்பர்கள் நமது தாய்மொழி பற்றியோ, தமிழர்களைப்பற்றியோ, கலாச்சாரத்தைப்பற்றியோ கேள்விகள் கேட்கும்போது தடுமாறாமல் எம்மால் பதிலளிக்கக்கூடியதாக இருக்கிறது.

ஜேர்மன், பிரான்ஸ், இத்தாலி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்கும் நாம், எம் தாய்மொழியான தமிழ்மொழியைப் புறந்தள்ளுவது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. உலக மூத்த மொழிகளுள் ஒரு மொழியான எம் தமிழ்மொழியையும் கற்றுப், பெருமையும், சிறப்பும் அடைவோம்.

நன்றியுடன்
தன்யா சந்திரா
11ம் ஆண்டு மாணவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Freude am Lernen...

„Dem Gelehrten verlangt es nach mehr Wissen, wenn er weiss, dass die Freude seines Lernens auch die Welt erfreut"

(aus„Thirukkural", Vers 399)

Zu meiner Person ist zu sagen, dass ich eine Schülerin des elften Jahrgangs an der Tamilischen Schule in Jüchen bin. Der obengenannte Titel mag dem Leser möglicherweise seltsam vorkommen, aber im Folgenden wird jeder begreifen, wieso ich gerade diesen Titel wählte.

Auch ich dachte zu Beginn, dass meine Zeit, die ich hier jeden Sonntag verbringe, reiner Zeitvertreib sei. Schließlich könnte ich meinen Sonntagvormittag auch anderswertig nutzen. Damals fragte ich mich noch oft, wozu ich überhaupt tamilisch lernen soll. Aber von Zeit zu Zeit begann ich zu begreifen, wie falsch ich immer mit meiner Einstellung lag. Hier in der Tamilischen Schule wird uns nicht nur tamilisch als Sprache gelehrt; uns wird beigebracht zu begreifen wie schön und einzigartig unsere Muttersprache ist und dass wir Stolz darauf sein können. Der Grund hierfür liegt nicht allein in der Sprache, sondern auch darin, wie unsere Lehrer versuchen den Unterricht durch Erzählungen, Erfahrungen und natürlich auch kleinen Späßchen zwischendurch abwechslungsreich zu gestalten. Vor meiner Zeit hier, sah ich tamilisch „nur" als eine Sprache. Heute sehe ich tamilisch als eine Kunst der Kommunikation, was tamilisch in meinen Augen zu einer Besonderheit macht. Viele mögen vielleicht denken, dass hier, wie auch in anderen Schulen nur Unterricht stattfindet, aber da liegen alldiejenigen falsch. Hier wird zwar unterrichtet, jedoch nutzen wir alle Gelegenheiten etwas gemeinsam zu unternehmen und zu feiern, wie beispielsweise an traditionell hinduistischen Feiertagen. Bei diesen Feierlichkeiten bietet es sich auch immer wieder an unsere bisher erworbenen Tamilisch-Kenntnisse in Form von Gedichten und Reden zu präsentieren, aber auch andere Talente vorzuführen. Als Schülerin weiss ich erfahrungsgemäß, dass zu Hause viel zu wenig tamilisch gesprochen bzw. tamilisch nur als Bruchteil in der häuslichen Kommunikation gebraucht wird. Das ist -wie ich mitbekomme- auch bei den meisten Mitschülern der Fall. Außerhalb von zu Hause wird ohnehin kaum tamilisch, nur Deutsch gesprochen. Deshalb ist der Sonntag, an dem wir Tamilische Schule haben auch der Tag, an dem wir als Schüler Gelegenheit finden uns auf tamilisch zu unterhalten. Hier ist es möglich das Wissen und die Kultur unsrer Muttersprache zu erwerben und für uns auszubauen. Desweiteren ist unsere Tamilische Schule für Schüler, aber sicherlich auch für Eltern und Lehrer eine Institution, wo man Gelegenheit findet, soziale Kontakte zu knüpfen und Freundeskreise zu erweitern. Als Schüler/in wird man auch oft bezüglich seiner Sprache und Kultur befragt, wie etwa von Freunden und Mitschülern der deutschen Schule. Nun können wir auch solche Fragen beantworten, ohne zuerst unsere Eltern befragen zu müssen. Ich hoffe, dass unsere Tamilische Schule, die uns viel Erfahrung schenkte, noch vielen weiteren Generationen unsere Muttersprache lehren kann und noch sehr viele Jubiläen feiert, damit tamilisch, eine der ältesten Sprachen der Welt, noch Bekannter wird und weitere Erfolge verzeichnen kann.

Tanja Chandra
Schülerin des 11. Jahrgangs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர் தமிழர்களின் தாய்மொழியின் முக்கியத்துவம்

உலகளாவிய ரீதியில் பரந்தும் செறிந்தும் வாழும் மனித இனத்தின் இடையே பல மொழி, பல இனம், பல மதம் என வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவற்றினுள்ளே காலத்தால் முந்தியதாகப் போற்றப்படும் சங்கத்தமிழ் போற்றுதற் குரியதாகும். சங்கம் வளர்த்த எம் தமிழ் மொழயானது ஈழநாட்டில் ஏற்பட்ட போரின் காரணமாகப் பல நாடுகளுக்குப் புலம் பெயர் மக்களுடன் தானும் புலம்பெயர்ந்துள்ளது. இவ்வாறு எம் தாய்பொழியான தமிழ் மொழி எமது புலம்பெயர் தமிழர்களுடன் உலகளாவிய ரீதியில் பெருமளவான நாடுகளில் பேசப்படுகின்ற மொழியாக உள்ளது. இவ்வாறு பேசப்படும் எம் தாய்மொழி போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியது தமிழர்களாகிய நமது தலையாய கடமை ஆகும்.

தமது சொந்த நாட்டை வெட்டுப் புலம் பெயர்ந்து அந்நிய தேசத்தில் வாழும் தமிழர்கள் இன்று பலர் நம் தாய்மொழியை ஊதாசினம் செய்கின்றனர். அந்நிய மொழியில் மோகம் கொள்கின்றனர். அந்நிய மொழி பேசுவதே நாகரீகம் என்று நினைக்கின்றனர். இந்த தவறான எண்ணம் மாற்றப்படவேண்டும். தமிழ் மொழி எனும் சொல் தனி ஒரு மொழி அல்ல அதனுள் தமிழர்களது பண்பாடு, கலை, கலாச்சாரம், வாழ்வியல், விழுமியம் கட்டுப்பாடு எனும் தமிழனுக்கே உரிய பல பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆகவே புலம்பெயர் தமிழர்கள் தமிழை வளர்க்க வேண்டும். தமிழ் வளருமானால் தமிழர் பண்பாடும் அந்நிய தேசத்தில் வளர்ச்சியடையும். புலம் பெயர் தமிழர்களில் பலருக்கு பலரது இன்றைய வாரிசுகளுக்கு தமிழினதும், தமிழ் இனத்தவரதும் பெருமைகள் தெரியாமலே உள்ளது. வீரமும், செழிப்பும் கொண்ட தமிழின் வரலாற்றினைப் புலம் பெயர் தமிழர் கற்கவேண்டும். அந்நிய நாட்டில் பிறந்தாலும் நீ உனது தமிழ்த் தாய்க்குத் தான் மகனாகப் பிறந்துள்ளாய், அந்தத் தமிழ்த் தாயின் புகழை நாமே அந்நிய நேசத்தில் பரப்ப வேண்டும். வரலாற்றக் காலங்களை நோக்கும் போது வீரமாமுனிவர் ஓர் அந்நிய தேசத்தவர். அவர் தமிழ் மீது கொண்ட ஈடுபாடு காரணமாகத் தமிழைத் தனது தாய்மொழியாக ஏற்றுத் தமிழுக்காகப் பல தொண்டாற்றித் தமிழை வளர்த்தார். எங்கோ பிறந்த அந்நியனுக்குத் தமிழ்ப் பற்று ஏற்படும்போது, புலம் பெயர்ந்து அந்நிய தேசத்தில் வாழும் நாம் தமிழை வளர்க்க வேண்டாமா? புலம் பெயர் தமிழர்கள் நம் தாய் மொழியினைத் தமது பிள்ளைகளுக்கு சிறு பராயம் முதலிலே கற்பிக்க வேண்டும். அப்படிக் கற்பிப்பதால் அவர்கள் பிள்ளைகளும் சிறந்த கலாச்சாரத்துடன் வாழக் கற்றுக் கொள்வர். அது மட்டுமல்லாது தமிழர் பண்டிகைகள், விழாக்கள் என்பவையும் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரவேண்டும். அவ்வாறு கடைப்பிடிக்கின்ற போது தமிழர் பண்பாடு உலகளாவிய ரீதியில் பேசப்படும்.

ஈழ நாட்டில் வாழும் எந்த ஒரு தமிழனும் தமிழ்மொழியைத் தன்னுள் திணிக்க வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. ஏனெனில் அது அவனது தமிழ் மண். எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இன்னாடே எனும் பாரதியின் கூற்றுக்கு இணங்க ஈழத்தமிழன் பரம்பரையாக வாழ்ந்து தமிழைத் தனக்குகுள்ளே சுவாசிக்கின்றான். அவன் சுவாசிப்பது தமிழ்க் காற்று ஆனால் அந்நிய தேசத்தில் புலம் பெயர்ந்து வாழும் நம் தமிழர் சுவாசிப்பது அந்நிய மொழிகலந்த காற்றே ஆகும். ஆகவே கலப்படமான காற்றை நாம் சுவாசிப்பதோடு அந்நியதேசத்தில் நம் தமிழ் மொழியை சுவாசிப்பதில் முக்கியத்துவம் காட்டுவோம்.

நன்றியுடன்
திரு. து.குலேந்திரன்
யூச்சன் தமிழாலய ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தமிழாலயம்

புலம்பெயர்ந்து 20000 க்கும் அதிகமானவர்கள் வாழும் ஜேர்மன் நாட்டில், கல்வி, கலை, கலாச்சரம், பண்பாட்டு விழுமியம் என்பவற்றின் அகத்தியத்தை (அவசியத்தை) உணர்ந்த புத்திஜீவிகளால் முதன்முதல் யூச்சன் தமிழாலயம் ஆரம்பிக்கப்பட்டது. இது யூச்சன் வாழ் தமிழ்மக்களிற்குப் பெருமைக்குரிய விடயமாகும். ஆரம்பங்களும், சரிவுகளும் அடுத்தடுத்து நிகழ்வது தமிழர்களின் வரலாறாய் விட்டது என்பது வேறுவிடயம்.

50 ற்கும் அதிகமான மாணவர்கள் கற்கும் ஆலயமாக யூச்சன் தமிழாலயம் விளங்குகிறது. 12ம் ஆண்டு முடித்து வெளியேறி பல்வேறு மட்டங்களில் பணிபுரியும் எங்கள் பிள்ளைகளைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. இவற்றைவிட கவிதை, கட்டுரை, பேச்சு, விளையாட்டு என்று பல்வேறு மட்டத்திலும் இவர்கள் தங்கள் திறமைகளை நிரூபித்திருக்கிறார்கள் என்பது பெற்றோருக்கும் அங்கு சேவை செய்யும் ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஆர்வலர்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கின்ற விடயமாகவே எம்மால் பார்க்கமுடிகிறது.

எமது தமிழாலயம் கல்விக்கும் அப்பால் புலம்பெயர்ந்து சிதறிக்கிடக்கும் எமது உறவுகள் மத்தியில் நட்பையும், புரிதலையும், நல்லுறவையும் வளர்த்து வருவது எமது பண்பாட்டைவிட்டு எமது எதிர்காலச் சந்ததிகள் வெகுதூரம் சென்றுவிடாது பாதுகாக்க உதவுகின்றது.

குற்றம் குறை காண்பதற்கென்றே பிறந்தவர்கள் மத்தியில், அவர்களின் ஆரோக்கியமான விமர்சனங்களைக் கருத்தில் கொண்டு செயலாற்றும் நிர்வாகிகள், ஆசிரியர்கள், பெற்றோர்களை மனம்திறந்து பாராட்டும் அதேவேளை, தொடர்ந்து உங்கள் வினைதிறன் அமைய வேண்டும் என்று வேண்டி நிற்கின்றோம்.

**„அன்னசத்திரம் ஆயிரம்வைத்தலில்
புண்ணியம்கோடி ஆங்கோர்
ஏழைக்கு எழுத்தறிவித்தல்“**

அன்புடன்
யூச்சன் தமிழாலய ஆசிரியர் குழாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழும் நானும்

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற கவி வரிகள் என் நெஞ்சை அடிக்கடி வருடும். உலகமெல்லாம் நாம் பரவ வைக்க முடிகிறதோ இல்லையோ குறைந்தது நாம்நமக்குள்ளே பரவவிட்டிருக்கின்றோமா என்பது விடைதெரியாத வினாவாகவே எழுந்து நிற்கின்றது. தாய்நாட்டையும் தாய்மொழியையும் நெஞ்சில் சுமந்து வந்த எம் முதற் சந்ததியினர் புலம் பெயர் வாழ்விலும் அதை நிலை நிறுத்த தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வந்தமை நமக்கான வரப்பிரசாதமே. ஆந்த வகையில் புலத்தில் வாழும் சிறார்களின் நன்மைகருதி தமிழாலயங்கள் தோற்றுவிக்கப்பட்டமை நமக்கெல்லாம் கிடைத்த பெரும் பாக்கியமே.

தமிழன்னை வயிற்றில் உருவாகி தமிழ்த்தாலாட்டில் வளர்ந்த எமக்கு தமிழ்தானே தாய்மொழி. கல்வி கேள்விகளை நாம் வாழ்விட மொழியில் கற்று வந்தாலும் பெற்றோரின் ஊக்கத்தினால் தமிழ் மொழியையும் கற்கின்றோம். சிறு பராயத்தில் இருந்தே கற்பதனால் எத்தனை மொழிகளையும் கற்றுக் கொள்ள முடியும் என ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. ஒரு குறிப்பிட்ட வயதுவரை பெற்றோரின் ஊக்கம் நமக்கு அவசியமாகின்றது. ஆதன் பின்னர் நாமாக மனம் வைத்து முயற்சித்தால் ஒழிய எந்த ஒரு செயலையும் சிறப்பாகச் சாதித்து விடமுடியாது என்பது என் அனுபவம். வாழ்விடக் கல்வி முறை வாழ்க்கை முறை இடையூறாக அமைவதாகக் காரணம் கூறி பல மாணவர்கள் தமிழ்மொழி கற்பதை இடைநிறுத்திவிடுகின்றனர். சுகபோகமும் பொழுதுபோக்கும் நிறைந்த புலவாழ்வில் நாம் கொண்ட மோகம் தான் காரணமாக இருக்கமுடியும் என நான் உணர்கிறேன். இன்று எத்தனையோ சிறார்கள் மொழிக்கல்வி தொழிற்கல்வி கலைத்துறை விளையாட்டுத்துறை என்று பலதுறைகளில் பரிணமித்து வருகிறார்கள். ஆனாலும் கணனிகளிலும் தொலைக்காட்சிகளிலும் தம்மைப் புதைத்துக்கொண்டு வெளிவர முடியாமல் தவிக்கும் இளஞ்சந்ததியினரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவசியம் என நம் பெற்றோரால் உணர்தப்படும் செயல்களை அக்கறையுடன் செயற்படுத்தினால் நிச்சயம் நம்மால் சாதிக்க முடியும். யூச்சன் தமிழாலயத்தில் ஆண்டு 11ஐ நிறைவு செய்து வெளியேறிய மாணவி என்ற வகையில் என் அனுபவமாக வளர்ந்து வரும் சிறார்களுக்கு இதையே கூற விரும்புகின்றேன். நாட்டியத்துறையிலும் தமிழ்மொழியிலும் வாழ்விடக் கல்வியிலும் ஊக்கமும் உற்சாகமும் கொடுத்து வளர்த்த என் பெற்றோர்க்கும் என்னைப் புடம் போட்ட ஆசான்களுக்கும் பாடசாலை நிர்வாகக் குழுவினருக்கும் என் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மன மகிழ்வடைகிறேன்.

நன்றியுடன்
விதுசா பிரதாபராசா
முன்னால் மாணவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நோக்கு

உலகின் தொன்மை வாய்ந்த மொழிகளில் எங்கள் செம்மொழியாம் இன்பத்தமிழுக்கு உரித்துடையவர்களே தமிழர்கள். இம் மொழியால்தான் நாங்கள் இனங்காணப்பட்டோம். எம் இனமக்களுக்கு மரபு முறையான வாழ்வுமுறைமைகள் உண்டென்பதை எம் முன்னோர்கள் வரையறுத்துத் தந்துள்ளனர். ஒழுங்கமைக்கப்பட்ட கலை, கலாச்சாரம், பண்பாடுகள் என்பன எங்களை ஓர் தனித்துவமான இனமாக வெளிகாட்டி நிற்பதனை நாம் பல நூல்கள் வாயிலாகவும் பல விழுமியச் சிறப்புக்களின் கண்டுபிடிப்புகளினாலும் அறிந்துகொள்ளும் வாய்ப்பாக அமைந்தது எனலாம்.
அன்று தொட்டு இன்றுவரை எம்மினச்சிறப்பை எம் மொழியின் பெருமையைப் புரிந்து கொள்ளாத சிலர் தத்தம் சுயவிருப்புக்களையே நோக்கமாகக் கொண்டு வாழ்ந்ததன் வினையாக வீரம்மிக்க எம்மினம் பண்போடு கலை கலாச்சாரம் என அமைதியாக சிறப்பாக வாழ்ந்தபோது எம் இன மொழியின் அதித வளர்ச்சியின் நிலைகண்டு காழ்ப்புணர்ச்சி கொண்ட வேற்று இனமக்களால் எம்மினம் சிறப்பிழந்தும் அடிமைப்படுத்தப்பட்டும் அழிக்கப்பட்டும் வரும் வேளையில் தம் உயிர்க் காப்பதற்காய்த் தமிழன் உலகமெங்கும் பரவிவாழ வேண்டிய நிலை உருவாகத் தொடங்கியது.
எந்த ஒரு இனமும் தன்னிலை தாழாமல் வாழ வேண்டுமெனில் தத்தம் கலை-கலாச்சாரம்- சிறப்புக்களை எம்மினச் சிறுவர்களுக்கு மரபுமுறை தவறாது அறியத்தருவது தாய்மொழிக்கல்வியால்தான் சாத்தியமாகும். ஆகவே தாய்மொழிக்கல்வி என்பது ஒவ்வொரு தமிழினச்சிறார்களுக்கு மிக முக்கியமானதாகும்.
தன் இன வரலாற்றை அறிந்து கொள்வதற்கு தாய்மொழிக்கல்வியால்தான் முடியும். தன் இன வரலாற்றை அறிந்து கொள்கின்ற ஒருவரால்தான் தன் தாய்மண் மீதும் தன் இனமக்கள் மீதும் பற்று வைக்கவும் மேன்மை நிலைக்குக் கொண்டு வரவும் முடியும். அத்தோடில்லாமல் தாய்மொழிக் கல்வி மூலம் எம்மின அடையாளங்கள் பேணப் படுவதோடு எமது கலை கலச்சாரம் பண்பாடுகள் கடல் கடந்தும் வெளியுலகிற்கு எடுத்துச் செல்லமுடிகின்றது.
புலம் பெயர் தேசத்திற்கு புகலிடம் கொண்ட எம்மின உணர்வாளர்களால் முன்னெடுக்கப்பட்டு 1989ம் ஆண்டு யூச்சன் தமிழாலயம் ஒன்று உருவாக்கப்பட்டு புலம்பெயர் சிறுவர்கள் தாய்மொழிக் கல்வி பயில முதன்முதலில் கல்விப் பணி தொடங்கப்பட்டது. இது முன்னாளில் ஓரளவு பின்னடைவைத் தந்தாலும் பின்னாளில் இதன் வேர்களாக பல கிராமங்களிலும் தமிழாலயங்கள் பல தோற்றம் பெற்றன.

பல்லாயிரம் சிறார்கள் தாய்மொழிக்கல்வி பெற இது வழிவகுத்தது எனலாம். எமது தமிழாலயம் பின்னாளில் நிர்வாக மாற்றங்களாலும் 2004ம் ஆண்டில் தமிழ்கல்விப் பணிமனையுடன் இணைந்து ஆரம்பிக்கப்பட்டு இன்று தலைநிமிர்ந்து தன் இலக்கு நோக்கி நகர்த்தப் படுகின்றது. இந்தச் சிறப்பான செயற்பாடுகளும் ஆசான்களது தளராத கல்விப்பணியும் பெற்றோர்களது ஒத்துழைப்பும் எம்மிளஞ் சிறார்களது தாய்மொழிக்கல்வியில் அவர்களை மிளிரச் செய்கின்றது என்பது எங்களுக்கெல்லாம் பெருமையே. இன்று ஐந்தாவது ஆண்டு நிறைவு விழா காணும் யூச்சன் தமிழாலயத்திற்கு எமது சிறப்பான வாழ்த்துக்கள்.
வாழ்க தமிழ் வளர்க்க தாய்மொழி.

நிதிப்பொறுப்பாளர்
திருமதி. சாந்தி நித்தியாநந்தன் (2004-2009)
திரு. ப. தணிகாசலம் (2009 தொடக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்தி நிற்கும் ...

யூச்சன் நகரில் தமிழாலயம் ஒன்றை உருவாக்கி, அதன் வளர்ச்சியில் இன்று வரை உறுதுணையாக இருந்து செயற்பாடுகள் புரிந்த அனைத்து வான்புகழ் நல்லுள்ளங்களுக்கும் நாம் நன்றிகளை நல்கி நிற்கின்றோம். 09.10.2010ல் ஐந்தாவது ஆண்டின் நிறைவு விழாவினை கொண்டாடுவதற்கு, ஆக்கமும், ஊக்கமும், தந்துதவிய யூச்சன் தமிழாலய மாணவ மாணவிகளுக்கும், பெற்றோர்களுக்கும் தமிழாலய வளர்ச்சியில் அதீத ஈடுபாடு கொண்டு உதவிகள் பல புரியும் யூச்சன் நகரத்தின் தொண்டு நிறுவனப் பணியாளர் திருமதி கில்டகாட் குக்ஸ், அரசியல் பிரமுகர் திரு ஏம்ஸ் அவர்களுக்கும் எங்கள் மன நிறைவான நன்றிகளை இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் தமிழாலயத்தினை நாம் சிறப்பாக நடாத்துவதற்கு இட வசதிகளை எங்களுக்கு ஏற்படுத்தித் தந்த யூச்சன் - கொக்நொய்க்கே' தேவாலயசபையினருக்கும் எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.
தொடர்ந்தும் எங்கள் தமிழாலய வளர்ச்சிப் பாதையில் உயரிய நோக்குடன் சீரிய சேவைகள் நாம் புரிவோம் என உறுதியான அன்பு மனம் கொண்ட அனைத்து நல்லுள்ளங்களை வானுயர்புகழ் கொண்டு வாழ்த்தி நிற்கிறோம்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று"

நன்றியுடன்
யூச்சன் தமிழாலய நிர்வாகம்

Danke

Wir bedanken uns recht herzlich bei Frau Hildegard Kux, Herrn Karl-Heinz Ehms, dem Kirchenvorstand Hochneukirch sowie bei den tamilischen Mitbürgern für die tatkräftige Unterstützung, die sie uns Jahrelang entgegen bringen und freuen uns weiterhin auf eine gute Zusammenarbeit.

Schulleitung
Thamilalayam Jüchen

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. தம்பையா சிவலிங்கம்
நிர்வாகி

திருமதி. சியாமளா பிரதாபராசா
உதவி நிர்வாகி / ஆசிரியை
ஆண்டு 9

திரு. சின்னதுரை இரவீந்திரன்
ஆசிரியர்
ஆண்டு 11

திரு. ஷரதன் பத்மநாதன்
ஆசிரியர்
ஆண்டு 2

செல்வன். கஜேந்திரன் சிவலிங்கம்
ஆசிரியர்
ஆண்டு 12

திரு. துரைசாமி குலேந்திரன்
ஆசிரியர்

திருமதி.
தனலட்சுமி இரவீந்திரன்
ஆசிரியை
ஆண்டு 4

திருமதி.
புஸ்பவதி கணேசமூர்த்தி
ஆசிரியை
ஆண்டு 6

திருமதி.
கிருஷ்ணகுமாரி மகாலிங்கம்
ஆசிரியை
ஆண்டு 3

திருமதி.
சத்தியபாமா சந்திரகுமார்
ஆசிரியை

திருமதி.
அனிலா சற்குணநேசன்
ஆசிரியை

திருமதி.
கீதா தனபால்
ஆசிரியை
ஆண்டு 1

செல்வன்.
கபிலன் சிவலிங்கம்
உதவி ஆசிரியர் ஆண்டு 8

செல்வி.
லக்சுஜா கணேசமூர்த்தி
உதவி ஆசிரியர் ஆண்டு 7

செல்வன்.
கதீச்சன் சிவலிங்கம்
உதவி ஆசிரியர் ஆண்டு 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகியுடன் ஆசிரியர்கள் 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுவிழாமலர்க்குழு

மலர்க்குழுப்பொறுப்பாளர்:	தம்பையா சிவலிங்கம் (நிர்வாகி)
மலர்க்குழு செயற்பாட்டாளர்:	செல்வி கிருத்திகா கிருபாமூர்த்தி (மாணவி)
ஆலோசனைக்குழு:	திரு. இரவீந்திரன் (ஆசிரியர்) திரு. பத்மநாதன் (ஆசிரியர்) திருமதி சியாமளா பிரதாபராசா (உதவி நிர்வாகி)
கணனி எழுத்துவடிவமைப்பு, தொழில்நுட்பம்:	கதீச்சன் சிவலிங்கம் (உதவி ஆசிரியர்) கபிலன் சிவலிங்கம் (உதவி ஆசிரியர்)
கணனி புத்தகவடிவமைப்பு:	கஜேந்திரன் சிவலிங்கம் (ஆசிரியர்)
நிழற்படங்கள் உதவி:	திரு. பிரதாபராசா திரு. முருகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org